

# தென்னாடு


செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.　www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 18ம் நாள் (01-02-2026 ஞாயிற்றுக்கிழமை) நிறைமதி வெளியீடு +94 21 222 9722


## எந்நிதியும் தருவான்
## செல்வச் சந்நியான்




**தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் திருக்கோயில்**

படம் : சற்குணராசா நிதர்சன் (GL Tharshan)

# பாராளுமன்றத்தில் இரண்டாவது ஆண்டாக தொடரும் பொங்கல் விழா

















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




## சமய வளர்ச்சியுடன் சமூக வளர்ச்சியில் தென்னாடு

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமானது, சைவத்தினையும், தமிழ்ப் பண்பாட்டினையும் பேணிப் பாதுகாப்பதற்கும் அவற்றினை அடுத்த தலைமுறையினரிடம் ஊடுகடத்தவும் உருவாக்கப்பட்ட சைவத் தமிழ் மடம் ஆகும். இங்கே அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை அருள்மிகு ஐம்பூதநாதப் பெருமான் மன்னி நிறைந்து அருள்மழை பொழிந்து வருகிறார்.

தென்னாடு மடம் செந்தமிழ் ஆகம வழியில், கல்லால மரத்தின் கீழ் இருந்து ஞானத்தினைப் போதிக்கும் **"தென்முகக் கடவுளை"** ஆதீன முதல்வராக ஏற்று ஒழுகும் சைவ சித்தாந்த வழி சைவத்தமிழ் மடமாகும். தென்னாடு மடமானது சைவப் பணிகளுக்கு அப்பால் பல சமூகப் பணிகளை செய்து வருகிறது. இதன் ஒரு அங்கமாக பல்கலைக் கழகம் மற்றும் உயர்தரம் கற்கும் அதிக தேவை உள்ள வெளிமாவட்ட மாணவர்களுக்கு விடுதி வசதி ஒன்றை கொக்குவிலில் ஆரம்பித்திருக்கிறது. வெளிமாவட்டங்களில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இது பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

இதுபோல் வெளிமாவட்டங்களில் மற்றும் இந்தியாவில் இருந்து தல யாத்திரைக்காக யாழ்ப்பாணம் வரும் அடியவர்கள் கட்டணமின்றி அல்லது குறைந்த கட்டணத்திற்கு தங்குவதற்கு ஒரு மடம் ஒன்றை உருவாக்கும் முன்னெடுப்பினையும் தென்னாடு சிவமடம் ஆராய்ந்து வருகிறது. வெளிமாவட்டங்கள் குறிப்பாக மலையகத்தில் இருந்து வடமாகாண சைவத் திருக்கோயில்களை வணங்குவதற்காக வருபவர்கள் தங்கிச் செல்வதற்கு யாழ்ப்பாணத்தில் நிச்சயமாக ஒரு மடம் வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், இந்தியா தமிழ்நாட்டில் உள்ள சிவனடியார்கள் தமது வாழ்நாளில் பாடல் கிடைக்கப்பெற்ற தலங்களைச் சென்று வணங்க வேண்டும் என்ற வேண்டுதலை நிறைவேற்ற முடியாமல், எப்படித் திருஞானசம்பந்தர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழ்நாட்டில் இருந்தே கோணேச்சரையும், கேதீச்சரநாதரையும் பாடினார்களோ அவ்வாறே வணங்கி வந்தவர்களுக்கு குறைந்த செலவுடன் யாழ்ப்பாணம் குறிப்பாக கப்பல் மூலம் வந்து எம்பெருமானை வணங்கி வேண்டுதலை நிறைவேற்ற இந்த மடம் உதவும் என்பதில் ஐயமில்லை.

ஐம்பூதநாதப்பெருமானின் திருவருளுடன் இவ்வருட இறுதிக்குள் கொக்குவில் தென்னாடு மடத்திற்கு அருகாமையில் **"காரைக்கால் அம்மையார் மடம்"** என்ற பெயருடன் ஒரு மடத்தினை அமைக்க திருவருள் கைகூடியுள்ளது.

இதுபோன்று சமய சேவைகளுடன், சமூக சேவைகளையும் செய்வதற்கு ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கிறோம். அத்துடன் காரைக்கால் அம்மையார் மடத்தில் ஒரு அன்னதான நிதியத்தினையும் உருவாக்க திருவருளின் துணையை வேண்டி நிற்கிறோம். இந்த பெருந் திட்டம் ஒரு தென்னாடு முன்னெடுப்பு ஆகும்.

கோயில்களுடன் மட்டும் நின்றுவிடாது ஆதீனங்கள், மடங்கள் மற்றும் சமய பயிற்சி நிறுவனங்களும் எங்கள் மண்ணில் உருவாகவேண்டும். அதற்கு எல்லாம் வல்ல பரம்பொருள் துணைநிற்க வேண்டும் என்று வேண்டி விண்ணப்பம் வைக்கிறேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(02-01-2026) – தென்னாட்டில் நடராசர் பெருமானுக்கு திருப்பொற்சுண்ணம் இடித்து ஆதிரைத் திருமஞ்சன வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (03-01-2026) – திருவாதிரை வழிபாடுகளும் திருவீதியுலாவும் சிறப்பாக இடம்பெற்றன. அதிகாலை 5 மணியளவில் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டு, 5.45 மணிக்கு ஆடல்வல்லான் பெருமான் திருவீதிக்கு எழுந்தருளி, அதனைத் தொடர்ந்து 7 மணியளவில் ஆதிரை அருட்காட்சி வழிபாடுகள் இடம்பெற்று அடியார்களிற்கு அமுது செய்வித்தலுடன் நிறைவுற்றது.

(03-01-2026) – தென்னாட்டின் அறுபத்து ஐந்தாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299, சிலை நல்லோரை, மார்கழித் திங்கள் 19 ஆம் நாள் நிறைமதி அன்று (03.01.2026 – சனிக்கிழமை) திருவாதிரை நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியற்துறை வாழ்நாள் பேராசிரியரும் முன்னைநாள் துணைவேந்தருமான சிவத்திரு. பொன் பாலசுந்தரம்பிள்ளை ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தற்காலத் துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ஐயா அவர்கள், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு க. சச்சிதானந்தன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி அவர்கள், ஒசுத்திரேலிய ஊடக கதிரியக்கவியல் நிபுணர் வைத்தியக் கலாநிதி பொன்மயிலநாதன் கேதீஸ்வரன் அவர்கள், இலங்கை அகஞ்சுரக்கும் தொகுதியில் கல்லூரியின் தலைவர் வைத்தியக் கலாநிதி மகாலிங்கம் அரவிந்தன் ஆகிய சிறப்பு விருந்தினர்களும் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன் புலவு கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் ஐயா அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியற்துறை வாழ்நாள் பேராசிரியரும் முன்னைநாள் துணைவேந்தருமான சிவத்திரு. பொன் பாலசுந்தரம்பிள்ளை ஐயா அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் அறுபத்து ஐந்தாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து, ஏனையோருக்கும் இதழ்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து, மருத்துவத் துறையில் பெரும் பங்களிப்பினை ஆற்றி, தமிழ்ப்பற்றுடன் சமூகப் பணிகளையும் முன்னெடுத்து வரும் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி அவர்கள், வைத்தியக் கலாநிதி பொன்மயிலநாதன் கேதீஸ்வரன் அவர்கள், வைத்தியக் கலாநிதி மகாலிங்கம் அரவிந்தன் அவர்கள், வைத்தியக் கலாநிதி சுப்பிரமணியம் சிவபாதமூர்த்தி ஆகியோரையும் மற்றும் தென்னாட்டின் மார்கழி கால, திருவெம்பாவை மற்றும் சிறப்பு வழிபாடுகளில் திருமுறை ஓதும் சிவப்பணியை சிறப்புற ஆற்றிய ஓதுவார் பெருமகனார் பரமேஸ்வரன் ஐயா அவர்களையும் சிறப்பித்து கௌரவிக்கும் நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

(04-01-2026) – அமரர். சிவசம்பு குணரத்தினம் அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன. அன்றைய தினம் திருவாசக முற்றோதலும் இடம்பெற்றது. (14-01-2026) – தென்னாடு சைவ மாணவர் சபை, ஒசுத்தேரேலியா அறம் அறக்கட்டளையுடன் இணைந்து வருட வருடம் முன்னெடுத்து வரும் **'பொங்குவோம் பொங்க வைப்போம்'** செயற்றிட்டத்தினால், கட்புலனற்றோர் சங்கத்தைச் சேர்ந்த 40 பேருக்கு பொங்கல் பொதிகளுடனான பொங்கல் பானைகள் வழங்கி வைக்கப்பட்டன.

(15-01-2026) – தென்னாட்டில் தைப் பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (16-01-2026) – தென்னாடு கோசாலையில் பட்டிப் பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (16-01-2026) – தைத் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (19-01-2026) – அமரர். சிவபாதசுந்தரம் இரத்தினம்மா அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன. (23-01-2026) – யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் தென்னாட்டின் ஏற்பாட்டில் சொற்பொழிவு இடம்பெற்றது. இச் சொற்பொழிவை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி சிவத்திரு. சந்திரமௌலீசன் லலீசன் ஐயா அவர்கள் நிகழ்த்தியிருந்தார். (30-01-2026) – தைத் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன் ஐயா அவர்களுக்கு உயரிய பத்மஸ்ரீ விருது



தமிழிசை மரபையும், திருமுறையையும் தன் மூச்சாகக் கொண்ட திருத்தணி ந.சுவாமிநாதன் அவர்களுக்கு இந்தியாவின் உயரிய **'பத்மஸ்ரீ'** விருது அறிவிக்கப்பட்டிருப்பது, தமிழிசைக்கும் திருமுறைக்கும் கிடைத்துள்ள வரலாற்று வெற்றியாகும்.

தஞ்சை மாவட்டம் திருக்கருகாவூரில் பிறந்த சுவாமிநாதன் (81), மயிலாடுதுறை **'தருமபுர ஆதீனத் தேவாரப் பாடசாலையில்'** பயின்று, இன்று அங்கேயே தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். திருத்தணி முருகன் கோயிலில் 26 ஆண்டுகள் ஓதுவாராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னும், 274 தேவாரத் திருத்தலங்களிலும் திருமுறைப் பாடல்களைப் பாடி பத்தி நெறியைப் பரப்பி வருகிறார். திருவாலங்காடு **'ஆதிரை விழாவில்'** இவர் பாடும் பண்ணிசை தேனினும் இனியதாகும்.

ஓதுவாமூர்த்திகள் நலச் சங்கத்தின் கௌரவத் தலைவராகவும், மூத்த ஓதுவாராகவும் விளங்கும் இவர், **'கலைமாமணி'**, **'திருமுறைக் கலாநிதி'**, **'பண்ணிசைப் பேரறிஞர்'** போன்ற பல உயரிய பட்டங்களைப் பெற்றவர். சில மாதங்களுக்கு முன்பு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் **'கங்கைகொண்ட சோழபுரம்'** திருக்கோயிலுக்கு வருகை தந்தபோது, அங்கு திருமுறைப் பாராயணம் செய்து சிறப்பித்தார்.

தமிழகத்தின் பண்ணிசை வரலாற்றில், ஒரு ஓதுவாருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இதனை **"திருமுறைக்குக் கிடைத்த மகுடம்"** எனத் தருமபுர ஆதீனக் குருமகாசந்நிதானம் உள்ளிட்ட சைவப் பெரியோர்கள் போற்றி மகிழ்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தேவாரம் கற்பித்து, அடுத்த தலைமுறைக்கும் இக்கலையைக் கொண்டு சேர்ப்பதில் இவர் பெரும் பங்காற்றி வருகிறார்.

இத்தகைய அங்கீகாரங்கள் தமிழ்ப் பண்ணிசைக்கு மேலும் வலுசேர்ப்பதோடு, வரும் தலைமுறையினர் இப்புனிதமான பணியைக் கட்டாயம் மேலோங்கச் செய்ய ஊக்கமளிக்கும். ஓதுவார் மரபில் தனக்கான உயரிய அடையாளத்தினைப் பெற்றுள்ள ஐயா அவர்களைத் தென்னாடு சார்பில் போற்றி வாழ்த்துவதோடு, இவரைப் போல் பலரும் ஓதுவார் நெறியைப் பின்பற்றி மேன்மை கண்டு, திருமுறைகளை எங்கும் பரவச் செய்திட ஐம்பூதநாதர் திருவருள் புரிவாராக.

**திருச்சிற்றம்பலம்**



திருத்தணி சுவாமிநாதன் ஐயா மற்றும் தருமபுரம் சுவாமிநாதன் ஐயா இருவரும் இருக்கும் அரிய புகைப்படம்

# அறநெறி ஆசிரியர்களை ஊக்குவிக்க பெருங்கோயில்கள் முன்வர வேண்டும்

## சைவ மகா சபை வலியுறுத்தல்

இளம் தலைமுறையினரின் ஆன்மிக வாழ்வையும் விழுமியங்களையும் கட்டியெழுப்பும் அறநெறிப் பாடசாலைகளை வலுப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். இதற்காகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்குத் தகுந்த மாதாந்த ஊக்குவிப்புத் தொகையை வழங்க அந்தந்தத் திருக்கோயில்கள் முன்வர வேண்டும். குறிப்பாக, போதிய நிதி வசதியற்ற கிராமப்புற அறநெறிகளுக்குத் துணையாக, நயினை நாகபூசணி அம்மன், தெல்லிப்பளை துர்க்கை அம்மன், வற்றாப்பளை அம்மன் போன்ற பாரிய நிதிப்பலம் கொண்டுள்ள பெருங்கோயில்கள் தங்கள் அறப்பணி நிதியங்கள் ஊடாக உதவ முன்வர வேண்டும் என அகில இலங்கை சைவ மகா சபை வலியுறுத்தியுள்ளது.

அறநெறிக் கல்வியை உறுதிப்படுத்தும் நோக்கில், வெள்ளி மாலை மற்றும் ஞாயிறு காலை வேளைகளில் தனியார் கல்வி நிலையச் செயல்பாடுகளை நிறுத்த வலி. வடக்கு பிரதேச சபை எடுத்த தீர்மானம் முன்மாதிரியானது. இம்முறைமை வடக்கு, கிழக்கு மற்றும் மலையகமெங்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இளையோரைப் போதைப்பொருள் மற்றும் கலாச்சாரச் சீரழிவுகளிலிருந்து காக்க, சிறந்த ஆன்மிகப் பயிற்சிகளுடன் ஆசிரியர்கள் அனைத்து வகையிலும் வலுவூட்டப்படுவது அத்தியாவசியமானது. எனவே, சைவப் பெருமக்கள் தங்கள் நேரம், நிதி மற்றும் அறிவுசார் புலமையை அறவழியில் செலவிட்டு, எம் கலைக் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாக்க ஒன்றிணைந்து களப்பணியாற்ற முன்வர வேண்டும் என்ற கருத்துக்களையும் சைவ மகா சபையினர் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

# சிவனடி சேர்ந்தார் சிவத்திரு. செல்லப்பா விஜயசுந்தரம் அவர்கள்

திருகோணமலை மாவட்டத்தின் சமய, சமூகப் பணிகளில் அரை நூற்றாண்டுகாலமாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த சிவத்திரு. செல்லப்பா விஜயசுந்தரம் அவர்கள் அண்மையில் சிவனடி சேர்ந்தார். திருகோணமலை மாவட்ட **'இந்து இளைஞர் பேரவையின்'** பொதுச்செயலாளராகப் பணியாற்றிய இவர், தனது வாழ்நாள் முழுவதையும் பேரவைக்காகவே செலவிட்டவர். நீண்டகாலமாக விடுபட்டிருந்த மட்டக்களப்பு மாவட்ட மக்களின் **'திருக்கோணேச்சர ஆலயப் பூசை'** உரிமையை மீளப் பெற்றுக் கொடுப்பதில் இவரது பங்கு அளப்பரியது. தன் உழைப்பு மற்றும் குடும்ப நகைகள் அனைத்தையும் **'எல்லைக் காளி'** கோயிலுக்காகத் தானமாக வழங்கிய இவரது பெருந்தன்மை என்றும் போற்றுதலுக்குரியது.

இவர் எதிர்மறையான விமர்சனங்களைக் கடந்தும், அமைப்பின் **'யாப்பு'** மற்றும் விதிமுறைகளுக்கு அமைய நேர்மையுடன் செயல்பட்டவர். இந்து மயானத்தைப் பாதுகாத்தல், பன்குளம் எல்லைக் காளி கோயில் நிலங்களை மீட்டெடுத்தல் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் வரலாறு சார்ந்த அரிய ஆவணங்களைப் பாதுகாத்தல் என இவரது பணிகள் பல்துறை சார்ந்தவை. இளையோருக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்த இவர், தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக்கொடுத்த ஆசானாகவும் விளங்கினார்.



நீத்தாரது இழப்பு திருகோணமலை மண்ணுக்கும் சைவத் தமிழுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அந்தவகையில் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்துள்ள சிவத்திரு. செல்லப்பா விஜயசுந்தரம் அவர்களின் உயிர் உய்வடைய வேண்டி ஐம்பூதநாதரிடம் விண்ணப்பம் வைக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

# சீர்வளர்சீர் நமச்சிவாய மூர்த்திகள் மகரத்தலைநாள் குருபூசை விழா



திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமுதல்வர் சீர்வளர்சீர் நமச்சிவாய மூர்த்திகளின் மகரத் தலைநாள் (தை – அசுவதி) குருபூசைப் பெருவிழா, 24 ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிக பரமா சாரிய சுவாமிகளின் தலைமையில், தைத்திங்கள் 2ஆம் நாள் (16.01.2026) வெள்ளிக்கிழமை முதல் தைத் திங்கள் 11 ஆம் நாள் (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை வரை என பத்து நாட்கள் திருவிழாக் கோலமாகச் சிறப்பாக நடைபெற்றது. மெய்கண்ட சந்தானத்தின் ஞானத் திருவுருவாக திகழ்ந்த குருமுதல்வரைப் போற்றும் இவ்விழாவில், நாள்தோறும் சிறப்புத் திருமஞ்சனங்கள், மகேசுவர பூசை, திருமுறைச் சிந்தனை விரிவுரைகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் பத்தி மணம் கமழ அரங்கேறின. சைவச் சித்தாந்தப் பரிபாலனமும், மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் இவ்விழாவிற்கு மேலும் மெருகூட்டின.

விழாவின் தலைநிகழ்வான பத்தாம் நாள் (25.01.2026) அன்று குருமுதல்வருக்குச் சிறப்புத் திருமஞ்சனங்கள் நடைபெற்று வழிபாடுகள் இடம்பெற்றன. அன்றைய நாளில் விழா சிறப்பு மலராக ‘தேவாரம் அடங்கன்முறை’ எனும் நூல் வெளியிடப்பட்டது. இந்நூலினைச் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் வெளியிட, மதுரை ஆதீனம், செங்கோல் ஆதீனம், துழாவூர் ஆதீனம் மற்றும் திண்டுக்கல் ஆதீனம் உள்ளிட்ட பல்வேறு ஆதீனமுதல்வர்கள் முதற்பிரதியைப் பெற்றுச் சிறப்பித்தனர். அத்துடன் சிவாகம, இசை மற்றும் கலைத்துறையில் சாதனை படைத்த சான்றோர்களுக்குப் பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, அரசு பொதுத் தேர்வுகளில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு அருட் கொடைகளும் ஆசியும் வழங்கப்பட்டன.

இரவு வேளையில் மேளதாளங்கள் முழங்க, யானை மற்றும் குதிரை அணிவகுப்புகள் சூழ, கயிலாய வாத்தியங்கள் மற்றும் வண்ணமயமான வாணவேடிக்கைகளுடன் பட்டணப்பிர வேசக் காட்சி மிக விமரிசையாக நடைபெற்றது. சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் சிவிகை ஏறி வீதி உலா வந்த காட்சி அடியார் பெருமக்களை மெய்சிலிர்க்க வைத்தது. இறுதியாகக் கொலு மண்டபத்தில் நடைபெற்ற சிவஞானக் கொலுக்காட்சியில் அடியார்ப்பெருமக்கள் அருட்பிரசாதம் பெற்று குருவருளையும் திருவருளையும் ஒருங்கே பெற்றனர்.

**திருச்சிற்றம்பலம்**





# தைப்பூசம் சிவதத்துவத்தின் பேரொளி



தைப்பூசத்தை சைவ சமயத்தின் ஆய்வுப் பொருளாக அணுகும் போது, அதை ஒரு நாளின் பெயராக மட்டுமே எடுத்துக் கொள்ளுதல் சைவ மரபின் தத்துவ ஆழத்தைக் குறைக்கும். தைப்பூசம் ஒரு “திருநாள்” என்ற அடையாளத்தை வைத்திருந்தாலும், அதன் அடித்தளத்தில் உள்ள கருத்து காலத்தையும் ஞானத்தையும் ஒரே கோட்டில் இணைக்கிறது. சைவ தத்துவத்தின் அடிப்படை வாக்கியம் **“சிவன் காலாதீதன்”** என்பதே காலம் சிவனை கட்டுப்படுத்தாது. அதே வேளையில், காலாதீதமான பரம்பொருள் உயிர்களுக்குப் புலப்படும் விதம் காலத்தின் வழியாக நிகழ்கிறது என்பதும் சைவ மரபின் இன்னொரு முக்கிய உண்மை. உயிர் காலத்தின் உள்ளே வாழ்கிறது அதன் அனுபவம் காலத்தால் அளவிடப்படுகிறது. ஆகவே அருள் வெளிப்பாடும் ஞானத்தின் அணுகுதலும் உயிர்க்கு காலத்தின் வழியே சாத்தியமாகின்றன. தைப்பூசம் இந்தத் தத்துவ உறவின் காலச் சின்னமாகவே விளங்குகிறது: காலம் இறைவனுக்குச் சிறை அல்ல ஆனால் உயிருக்கு அருள் வந்து சேரும் பாதை காலமே.

இந்தப் புரிதல் சைவ ஆகம மரபில் மேலும் தெளிவுபடுகிறது. ஆகமங்கள் காலத்தை வெறும் கணித அளவீடாகக் காணவில்லை அது கிரியா சத்தியின் செயற்பாட்டு தளமாகக் கருதப்படுகிறது. வழிபாடு என்பது எண்ணத்தோடு மட்டும் நிகழும் உள் செயல் அல்ல அது செயல், தூய்மை, மன நிலை, கால ஒழுங்கு ஆகியவை ஒருங்கிணையும் போது முழுமை அடைகிறது. அதனால் தான் எந்த அனுட்டானம் எந்தக் காலத்தில் நிகழ வேண்டும், எவ்வகை சுத்திகள் முன் தேவை, எந்த மனநிலை அடிப்படையாக இருக்க வேண்டும் என்று ஆகம ஒழுங்குகள் வலியுறுத்துகின்றன. இங்கு காலம் **“வழிபாட்டு பொருளின்”** வெளியிலான ஒன்று அல்ல வழிபாட்டின் செயற்பாட்டில் ஒரு கூறு.

இந்தக் கால செயல் இணைப்பின் பின்னணியில் தைத் திங்கள் முக்கியத்துவம் பெறுகிறது. தைத் திங்களை சைவ மரபு பருவ மாற்றத்தின் அடையாளமாக மட்டும் பார்க்கவில்லை உத்தராயணத்தின் தொடக்கமாகக் கொண்டு ஆன்மீக இயக்கத்தின் சின்னமாக வாசித்தது. உத்தராயணம் என்ற சொல் வெளிப்புற வானியல் திருப்பத்தை சுட்டினாலும், சைவ தத்துவப் பார்வையில் அது உயிரின் உள் இயக்கத்தோடும் இணைக்கப்படுகிறது: பாசத்தின் கட்டுப்பாட்டிலிருந்து மேல்நிலையை நோக்கி நகரும் இயக்கம். தைத் திங்கள் அந்த மேல்நிலை இயக்கம் தொடங்கும் காலச் குறியாக நிலைகொள்கிறது.



சைவத்திரு.சி. பிரியதர்சன்
பிரதிச்செயலாளர்
இலங்கைச்
சைவநெறிக் கழகம்

இந்த காலச் குறியீட்டோடு பூசம் நட்சத்திரம் இணையும் போது தைப்பூசம் ஒரு முழுமையான தத்துவப் பெயராக உருப்பெறுகிறது. சைவ மரபில் நட்சத்திரங்கள் வெறும் சோதிடக் குறிகள் அல்ல அண்ட ஒழுங்கில் செயல்படும் சத்திகளின் குறியீடுகளாகவும் பேசப்படுகின்றன. பூசம், குறிப்பாக குரு தத்துவத்தோடு இணைக்கப்படும் நட்சத்திரம் என்ற புரிதல் சைவ மரபில் காணப்படுகிறது. இங்கு **“குரு”** என்பது மனித ஆசான் என்ற வரையறைக்கு மட்டும் உட்படவில்லை இறைஞானம் உயிருக்கு அணுகும் தத்துவ நிலையைச் சுட்டும் பெயர். திருமந்திரம் குருவையும் சிவனையும் ஒன்றிணைத்துக் காட்டுவது, குரு தத்துவம் சைவ ஞான மரபில் எவ்வளவு மையமானது என்பதை உணர்த்துகிறது. ஆகவே தைத் திங்களின் உத்தராயணத் தன்மையும் பூசம் நட்சத்திரத்தின் குரு தத்துவமும் சேரும் தருணம், **“ஞானம் உயிரை அணுகும் காலம்”** என்ற மட்டும் அல்ல **“ஞானம் செயலில் இறங்கும் காலம்”** என்ற கூர்மையான பொருளை அடைகிறது. இந்தப் புள்ளியில் தான் தைப்பூசம் ஒரு சமூக நிகழ்வு என்ற எல்லையைத் தாண்டி, சைவ தத்துவத்தின் கால–ஞான இணைப்பை வெளிப்படுத்தும் அடையாளமாகிறது.

சைவ மரபில் ஞானத்தின் மூலாதாரம் சிவனே. ஆலமர் கடவுள் (தட்சிணாமூர்த்தி) வடிவில் சிவன் அமைதி அறிவுரையின் வழியாக பரம்பொருள் ஞானத்தை வெளிப்படுத்துகிறான் ஆனால் அந்த ஞானம் தகவல் சேர்க்கை அல்ல, உயிரின் இருப்பு நிலையை மாற்றும் அனுபவம். இருப்பினும் உயிரின் பாசக் கட்டுப்பாடு வெறும் கருத்தறிவால் தளராது. பாசம் என்பது அறியாமை, கர்மம், மாயை ஆகிய பிடிகளின் ஒருங்கிணைந்த கட்டுப்பாடு அது உயிரை **“நான்”** என்ற மாய மையத்தில் உறுதியாகக் கட்டி வைத்திருக்கும் வரை, ஞானத்தின் ஒளி தொட்டாலும் அது முழுமையாக விடுபடாது. அதனால்தான் சைவ புராண மரபு ஞானத்தை ஒரு செயல்படும் சத்தியாகவும் உருவகிக்கிறது. அந்தச் செயல் வெளிப்பாட்டின் வடிவமாக முருகன் உருவகிக்கப்படுகிறார். முருகன் ஒரு தனித்த தெய்வமாகப் பிரித்துப் பேசப்படவில்லை சிவனின் ஞான சத்தி செயலில் இறங்கிய வெளிப்பாடு என்ற புரிதலில்தான் அவரது தத்துவ அடையாளம் நிற்கிறது.

இந்தச் செயல் வெளிப்பாட்டின் மையச் சின்னமாக வேல் அமைந்துள்ளது. வேல் ஒரு ஆயுதமாக மட்டும் பார்க்கப் படும்போது புராண மொழியின் வெளிப்புறத் தோற்றமே முன்னிலை பெறும் ஆனால் சைவ தத்துவத்தில் வேல் என்பது ஞானத்தின் கூர்மை. ஞானம் அஞ்ஞானத்தை மென்மையாகத் தள்ளி விலக்கும் ஒன்றல்ல் அது பாசத்தின் பிடியை அறுக்கும் விடுதலைச் செயல். இந்தச் செயலை சைவ புராண மரபு வேல் வழங்கும் சம்பவமாக மொழியாக்கு கிறது. முருகனுக்கு வேல் சிவனால் நேரடியாக வழங்கப்பட்டது என்பதே முதன்மை தத்துவ ஓட்டத்திற்குப் பொருந்தும் நிலை. சில பிற்கால விளக்கங்களில் வேல் வழங்கும் செயல் பார்வதி வழியாக விவரிக்கப்பட்டாலும், அது சம்பவத்தின் மூல அதி காரத்தை மாற்றுவதில்லை ஏனெனில் சைவ தத்துவத்தில் சத்தி சிவனிடமிருந்து பிரிந்த தனி ஆதாரம் அல்ல. ஆகவே வேல் வழங்கப்பட்ட நிகழ்வின் மூல அதிகாரம் சிவனிடமே நிலைபெறுகிறது. இதை "யார் கொடுத்தார்?" என்ற விவாத மாகச் சுருக்குவது தத்துவத்தைச் சிறிதாக்கும் முக்கிய மானது **"எந்தத் தத்துவம் செயல்பட்டது?"** என்பதே. அந்தத் தத்துவம் சிவதத்துவமே அருள் ஞானமாகி, ஞானம் செயலில் இறங்கி, உயிரின் பாசப் பிடியை மாற்றத் தொடங்கும் அதே இயங்குதான் தைப்பூசத்தின் உள் மையம்.

சிவதத்துவம் ஞானமாகவும் செயலில் இறங்கும் சத்தி யாகவும் வெளிப்படும் தருணம் தைப்பூசம் எனப் புரிந்து கொள்ளப்பட்டவுடன், அந்த ஞானம் உயிரில் எவ்வாறு நிலைபெறுகிறது என்ற கேள்வி இயல்பாக எழுகிறது. சைவ சித்தாந்தத்தில் ஞானம் ஒரு அறிவுத் தகவலாக அல்ல் உயிரின் இருப்பு நிலையை மாற்றும் அனுபவமாகவே வரை யறுக்கப்படுகிறது. அந்த அனுபவம் நிகழ்வதற்கு உயிர் தன்னையே அதற்குத் தகுதியான நிலையில் அமைத்துக் கொள்ள வேண்டும். இந்தத் தகுதி உருவாக்கும் செயல் முறையே சைவ ஆகமங்களில் "தவம்" என அழைக்கப்படு கிறது. தவம் என்பது உடலைத் துன்புறுத்தும் செயல் அல்ல் உயிரை பாசத்தின் பிடியிலிருந்து விடுவிக்கச் செய்யும் உள் ஆன்மீகச் செயல்முறை. காமிக ஆகமம் போன்ற நூல்கள் தவத்தை உடல், வாக்கு, மனம் என்ற மூன்று நிலைகளாக வகைப்படுத்துகின்றன் இதன் மூலம் தவம் உயிரின் முழுச் செயல்பாட்டையும் ஒரே திசையில் ஒழுங்குபடுத்தும் பயிற்சி எனப் புரிந்துகொள்ளப்படுகிறது.

தைப்பூசத்தைச் சுற்றி கடைப்பிடிக்கப்படும் விரதங்கள், உணவு கட்டுப்பாடு, மௌனம், தூய்மை போன்ற ஒழுக்கங்கள் இந்த மூன்று நிலைகளையும் ஒருங்கிணைந்து தொடு கின்றன. இங்கு தவம் ஒரு நாளுக்குரிய அனுட்டானமாக அல்ல் தைப்பூசத்திற்கு முன்பும் பின்பும் நீளும் தொடர்ச்சியான ஆன்மீகப் பயிற்சியாகவே சைவ மரபில் வலியுறுத்தப்படு கிறது. இந்தத் தவ ஒழுக்கம் சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் "அனுபவ சுத்தி" என்ற கருத்துடன் நேரடியாக இணைகிறது. சிவஞானபோதம், உயிர் ஞானத்தை அடைய முன் அதன் கருவிகளான உடல், மனம், வாக்கு ஆகியவை சுத்திகரிக்



கப்பட வேண்டும் என்று கூறுகிறது. இங்கு சுத்திகரிப்பு என்பது வெளிப்புறக் கட்டுப்பாடு மட்டுமல்ல் உயிரின் அனுபவ உலகம் மாறத் தொடங்கும் ஒரு உள் மாற்றம். உணவு கட்டுப்பாடு உடலைத் தண்டிப்பதற்கான வழி அல்ல் உடலை மனத்தின் கீழ்ப்படுத்தும் ஒழுக்கப் பயிற்சி. உடல் மனத்தின் கீழ்ப்பட் டால், மனம் ஞானத்தின் கீழ்ப்படையத் தொடங்குகிறது இந்த அடுக்கமைப்பே தவத்தின் தத்துவ இயங்குதளம்.

இந்த நிலையில் காவடி என்ற நடைமுறை தைப்பூசத் துடன் இணைவது தற்செயலான ஒன்றாக இல்லை. கந்த புராண மரபில் காவடி ஒரு சாதாரண சுமை அல்ல் தியாகம், பொறுப்பு, பொறுமை ஆகியவற்றின் உருவகம். காவடி சுமப் பது என்பது உயிர் தனது கர்மச் சுமைகளை உணர்ந்து, அவற்றை இறைவன் முன் ஒப்படைக்கும் செயல். சைவ சித்தாந்தத்தில் கர்மம் உயிரின் மேல் சுமையாகக் கருதப்படு கிறது அந்தச் சுமையை உயிர் அனுபவிக்க வேண்டியதே. ஆனால் அந்த அனுபவம் ஞானத்தின் வழியாக மாற்றப் படலாம் என்பதே சைவ தத்துவத்தின் அடிப்படை உண்மை. காவடி இந்த மாற்றத்தை உடல் அனுபவமாக வெளிப்படுத்து கிறது. அது கர்மத்தை மறுப்பதல்ல் கர்மத்தை உணர்ந்து, அருளின் வழியாக அதன் பிடியைத் தளரச் செய்வதற்கான தத்துவப் பயிற்சி.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்




# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,

செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.

+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# தைபிறந்தால் வழி பிறக்கும்!

யாழ்ப்பாணத்து மண், ஈழத்துச் சைவத்தின் விளைநிலம். நல்லை நகர் ஏறும் நாவலர் பெருமான் வளர்த்தெடுத்த இப்புண்ணிய பூமியில், மற்றுமொரு தைத்திருநாளைச் சைவத் தமிழ் மக்களாகிய நாம் பத்திப் பெருக்குடன் கொண்டாடினோம். உலகெங்கும் பரந்து வாழும் எமது வாசகப் பெருமக்களுக்கு **“தை பிறந்தால் வழி பிறக்கும்”** எனும் நம்பிக்கையூட்டும் நல்வாழ்த்துகளை எமது இந்த இதழ் உரித்தாக்குகின்றது.

சைவ சித்தாந்தத்தின்படி, ஆன்மாக்கள் வினைப் பயனால் இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன. ஆனால், இறைவனின் ‘அருட்சத்தி’ பதியும் வேளையில், எத்த கைய இருண்ட விதியும் விலகி ஒளி பிறக்கும். சூரியனின் தென்முகப்பெயர்ச்சியின் மந்தநிலை நீங்கி, சூரியன் வடதிசை நோக்கி நகரும் இந்தப் புண்ணிய காலம் தொடங்கும் தைத் திங்கள் ஒளி பொருந்திய வழி பிறக்கும் விடிவு காலமாகிறது. ஆன்மீக விழிப்புணர்விற்கு உகந்த காலம் இது! சிவம் என்ற செம்பொருளை நோக்கிய ஆன்மாவின் பயணத்திற்கு இத் திங்கள் ஒரு நல்வாயிலாக அமைகிறது.

பொங்கல் பெருவிழா என்பதே பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையை அழகாக விளக்கும் ஒரு வாழ் வியல் சடங்கு தான். அதாவது, பேரொளியாய் நின்று உலகை இயக்கும் ஞாயிறே இங்கு பதி. இறைவனை நோக்கிப் பொங்கி எழும் பாலே ஆன்மாவாகிய உயிர். அரிசியைச் சுற்றியுள்ள உமி நீக்கப்படுவது போல, ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் நீங்கினால் மட்டுமே ஆன்மா இறைவனை அடைய முடியும் என்பதைப் புதுப்பானைப் பொங்கல் உணர்த்துகிறது.

**“ஈசன் அருளே இன்பம்”** என வாழும் சைவ மக்கள், பொங்கல் திருநாளில் உழவுக்கும் தொழிலுக்கும் உற்ற துணையாய் நிற்கும் ஆவினங்களாகிய மாடுகளுக்கும் நன்றி செலுத்துகிறோம். இது உயிர்களிடத்தில் அன்பு செலுத்தும் **‘உயர் அன்பின்’** நெறியாகும். **“யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை”** என்ற திருமூலரின் வாக்குப்படி, எளிய முறையில் இயற்கையை வழிபடும் இத்திருநாள், சைவத்தின் எளிமையையும் வலிமையையும் ஒருசேரப் பறைசாற்றுகிறது.

இத்தைத் திங்களில் வரும் தைப்பூசப் பெரு நாளும் நமக்கு உகந்த நன்னாளே! இந்நாளில் தான் உமை யம்மையார், முருகப்பெருமானுக்கு அறியாமை எனும் சூரனை அழிக்க ‘ஞானவேல்’ வழங்கியதாகப் புராணம் கூறுகிறது.

சிவனடியார்கள் இந்நாளில் **‘நடராசப் பெருமானின்’** ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசிப்பதையும், முருகனுக்குக் காவடி எடுப்பதையும் பெரும் பேறாகக் கருதுகின்றனர்.

இன்று எமது தாயகம் பல்வேறு சவால்களைச் சந்தித்து வரும் வேளையில், **“அஞ்சுவது யாதொன்றுமில்லை”** என்ற அப்பர் பெருமானின் துணிச்சலே எமக்குத் தேவை. கோயில்கள் தோறும் சிவநாமம் ஒலிக்கச் செய்வதும், சைவத் தமிழ் பண்பாட்டைச் சிதையாமல் அடுத்த தலை முறைக்குக் கடத்துவதும் இத்தையினில் நாம் எடுக்க வேண்டிய உறுதியாகும். அகத்திலிருக்கும் அறியாமை எனும் இருள் நீங்கி, தைத் திங்களின் ஒளியில் புதியதொரு அறநெறி பிறக்கட்டும்.

ஈழத்துச் சைவப் பெருமக்கள் யாவரும் எல்லா வளமும் பெற்று, சித்தாந்தச் சுடர் பரப்பி, சிவபோகத்தில் திளைக்க எல்லாம் வல்ல ஐம்பூதநாதப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

**தென்னாடுடைய சிவனே போற்றி!**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!**

**திருச்சிற்றம்பலம்**

# 2025 ஆம் ஆண்டுக்கான 'சாதனைத் தமிழன்' விருது பெற்ற வித்துவான் நல்லூர் பி.சு.பாலமுருகன் அவர்கள்



யாழ் மண்ணின் சைவப் பண்பாட்டையும் தமிழிசை மரபையும் உலகெங்கும் பறைசாற்றிவரும் வித்துவான் சுப்புசாமி பாலமுருகன் அவர்களுக்கு, டான் குழுமம் **'2025-ஆம் ஆண்டுக்கான சாதனைத் தமிழன்'** விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது. நல்லூர் கலைக் குடும்பத்தில் பிறந்து, தந்தை சுப்புசாமி மற்றும் என். கே. பத்மநாதன் போன்ற மேதைகளிடம் குருகுல முறையில் இசை பயின்றவர். சாத்திரிய சங்கீத அறிவும் வாய்பாட்டு இசை திறனும் மிக்க இவரது ஆளுமை, ஈழத்து பெருவங்கிய (நாதஸ்வரம்) மரபுக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துள்ளது. திரை இசை மோகங்களுக்கு மத்தியிலும் செவ்வியல் இசையைப் பேணி, ஒரு இராகத்தை மணிநேரக் கணக்கில் பண்ணிசை (ஆலத்தி) செய்யும் இவரது ஆற்றல் ஈழத்து இசைப் பெருமையை விண்ணுயரச் செய்துள்ளது.

தமிழகக் கலைஞர்களை எதிர்பார்த்திருந்த நிலையை மாற்றி, இன்று இந்தியாவின் பல மாநிலங்களிலும் ஈழத்து இசையினை முழங்கச் செய்தவர் இவர். தருமபுர ஆதீனத்தின் 'நாதஸ்வர கலாநிதி' முதல் அமெரிக்க அரசின் அங்கீகாரங்கள் வரை பெற்ற இவர், தன் பிள்ளைகளையும் இசை வாரிசுகளாக உருவாக்கித் தமிழரின் பாரம்பரியக் கலையை அடுத்த தலைமுறைக்குக் கடத்தி வருகின்றார். சைவத்தமிழ் விழுமியங்களைப் போற்றி யாழ் மண்ணிற்குப் பெருமை சேர்த்து வரும் இவரது சாதனைப் பயணம் மென்மேலும் தொடர்ந்து, குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாய் வாழ எல்லாம்வல்ல ஐம்பூதநாதர் அருள் புரிவராக.

**திருச்சிற்றம்பலம்**

# இலங்கையில் 16 மாவட்டங்களில் தருமபுர ஆதீனத்தின் திருமுறைப் பயிற்சி

தருமபுர ஆதீனத்தின் 26 ஆவது குருமகா சந்நிதானத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஈழமெங்கும் திருமுறை ஒளியைப் பரப்ப **'பன்னிருதிருமுறை ஆராய்ச்சி மையம்'** வரலாற்றுச்சிறப்புமிக்க திட்டத்தைத் தொடங்கியுள்ளது. தற்போதைய 27 ஆவது குருமகா சந்நிதானத்தின் பேரருள் ஆணையின்படி, யாழ்ப்பாணம் முதல் காலி வரை 16 மாவட்டங்களில் இத்திருமுறை வகுப்புகள் நேரடியாக நடைபெறவுள்ளன. பிழையறத் திருமுறை பயில வேண்டும் என்ற சிவநேசச் செல்வர்களின் ஏக்கத்தைப் போக்கும் வகையில், எளிய கட்டணத்தில் (பெரியவர் 1,000 ரூபா, மாணவர் 500 ரூபா) இத்திருமுறைப் பணி முன்னெடுக்கப்படுகிறது.

தொன்மையான குரு சீடர் மரபுப்படி, அண்ணாமலை பல்கலைக்கழகத் தேவார உதவிப் பேராசிரியர் திருமுறைக் கலாநிதி முனைவர் தி. பாலச்சந்திர ஓதுவாரிடம் பயின்று தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு நடைபெறும் இவ்வகுப்புகள், சைவ விழுமியங்களை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதை உறுதி செய்கின்றன. பள்ளி மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் இதில் இணைந்து பயிலலாம். ஈழத்துச் சைவ வரலாற்றின் இப்பொற்கால வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புவோர், தருமபுர ஆதீனத்தின் இலங்கை ஒருங்கிணைப்பாளர் முனைவர் சிவஔிரி கிரீஷ்குமார் (+919994188964) அவர்கள் ஊடாக, உங்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.




**திருச்சிற்றம்பலம்**

# சிவபுராண விளக்க உரை





பேராசிரியர் சித்தாந்த சைவச் சுடர்மணி மீ.சிவசண்முகம், கோயம்பத்தூர், தமிழ்நாடு.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**சிந்தை மகிழச், சிவபுராணம் தன்னை,**
**முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்**

**சிந்தை மகிழ:-** மனம் மகிழ. சிவபுராணத்தை பெருமான் மீது உள்ள அன்பினால், அவன் மீது உள்ள ஒரு நன்றி உணர்வோடு சிவபுராணத்தைச் சொல்லுகின்ற அடியார்களுக்கு பல பிறவிகளில் சேர்த்து வைத்த வினை மொத்தமாகக் கழியும் என்பது பாடம். அவன்றாளை வணங்குவார்க்குத் துன்பம் சிறிதும் தோன்றாமல் இன்பமே நிலவுமாதலின் "**சிந்தை மகிழ**" என்றார்.

அவன் புகழாகிய சிவபுராணத்தை உரைத்தலும், கேட்டலும் அடியார்க்கு உரிய இலக்கணம் என்று ஏற்கனவே திருவெம்பாவை உரையில் வித்துவான். தண்டபாணி தேசிகரும், அருணை வடிவேல் முதலியாரும் எழுதி உள்ளனர்.

அடியார்க்கு உள்ள பத்து இலக்கணங்களில் ஒன்று சிவபுராணம் கேட்டல் என்பது. அதுபோல் சிவதோத்திரம் செய்தல் என்பது ஒன்று. ஆதலால் சிவத்தோத்திரம் ஆகிய இந்த சிவபுராணத்தைப் பெருமான் மீது அன்பு கொண்டு சொல்ல வேண்டும் என்பதையே "**சிந்தை மகிழ**" என்ற ஒரு வார்த்தையில் சொன்னார். அடியார்கள் செய்கின்ற வழிபாடு, பெருமான் மீது அன்பு கொண்டு, மகிழ்ச்சியாக செய்ய வேண்டும்.

அவன் புகழாகிய சிவபுராணத்தை உரைத்தால் ஆகாமி

யம் சஞ்சிதமாகப் பரிபாகப் பட்டிருக்கிற வினைகள் அனைத்தும் தம் வலிகுன்றித் தேய்ந்து மாய்ந்தே போகும் என்பார். **"முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்"** என்றார்.

**ஓய:-** நுணுக. இல்லாமல் ஆகிவிடும் என்பது பொருள். இது வித்துவான் தண்டாபாணி தேசிகர் உரை.

அருணை வடிவேல் முதலியார் அவர்கள், **"முந்தை வினை முழுது மோய உரைப்பன் யான்"** என்று சொல்லி, வறுத்த வித்து போல் அது மீண்டும் தலை எடுக்காத வண்ணம் நீங்கி விடும் என்று பொருள் கூறுகிறார். அந்த வகையிலே, வினை மீண்டும் நம்மை தாக்கா வண்ணம், அதாவது பிறவிக்கு நாம் வாராமல் இருக்க வேண்டும் என்று சொன்னால் சிவ புராணத்தை முழுமையாக அன்புடன் ஓத வேண்டும் என்பதே இதன் கருத்து.

**"கண்ணுதலான் தன் கருணை கண் காட்ட வந்து எய்தி"**

நெற்றியில் கண்ணுடைய பெருமான், தன் அருட்க் கண்ணைக் காட்ட, அதனை ஆணையாகக் கொண்டு அவன் திருமுன் வந்தடைந்து, நினைத்தற்கும் எட்டாத எழுச்சி மிக்க திருவடியை வணங்கி நின்று என்பது பொருள்.

நெற்றிக்கண் எஞ்ஞான்றும் தீய குணம் உடையாருக்கு மறக்கருணைக் காட்டி ஆட்கொள்வதாயிருக்கவும், அடியேனுக்கு அவ்வாறு காட்டாது சூரிய சந்திரர்களாகிய வளர்ச் சிக்கும், தட்பமான வாழ்வுக்கும் உரிய கண்ணின் வழியாகக் கருணையைக் காட்ட என்பதாம்.

அவன் ஆணையாவது குறிப்பாவது இன்றித் தலைவனிடம் சார்தலாகாது ஆதலின் அவன் காட்டிய கருணைக் கண்ணையே குறிப்பான ஆணையாகக் கொண்டு வந்தெய்தி என்பதாம்.

**"எண்ணுதற்கு எட்டாய் எழிலார் கழல் இறைஞ்சி"** என்ற வரியில்

**எண்ணுதல்:-** மனத்தால் நினைத்தல்.

மனம் பொறி வழியே சென்று பற்றிய அளவாயும், அந்நிலையில் தன் கற்பனையால் பெருக்கியும், மறதியால் சுருக்கியும் அறியும் தன்மையதன்றி, அளவிறந்த பரம் பொருளைஅறியாது. ஆதலால் எண்ணுதற்கு எட்டாக் கழல் என்றது. உபலக்கணமாகக் காணற்கு எட்டா, தீண்டற்கு எட்டாக் கழல் என்பனவும் கொள்க.

பெருமானை **"சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன் வந்து"** என்று திருப்பள்ளி யெழுச்சியில் சொல்கிறார். நம்முடைய மனத்தினாலே பெருமானை நினைப்பதற்கு எல்லாம் அப்பாற்பட்டு நின்று விளங்குபவன். அதனால் நம் மனத்தால் எண்ண முடியாது என்பதைதான் **"எண்ணுதற்கு எட்டா எழிலார்"** என்றார்.

**எழில்:-** எழுச்சி, அழகுமாம். எழுச்சி பொருந்திய திருவடி.

**"விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய், எண் இறந்து, எல்லை இலாதன! நின் பெருஞ்சீர்"**

விண்ணில் நிறைந்தும், மண்ணில் நிறைந்தும், அவற்றின் மிக்கும் உள்ளவனே! புலப்பட்டுத் தோன்றும் ஒளியானவனே! எண்ணின் எல்லையையும்கடந்து அளவற்று விளங்குபவனே என்றவாறு.

விண் எல்லாவற்றையும் தன்னகத்தடக்கி நிற்பதாயினும் அதனுள் இடமின்றிச் செறிந்த பொருளும், மண்ணில் எங்கும் நிறைந்த பொருளும், அவற்றின் மிக்கபொருளும், எண்ணின் அளவைக்கடந்து விரிந்து பரந்த பொருளும் சிவம் என்று குறித்தவாறு.

விண் நிறைந்து மண் நிறைந்து என்பவற்றிற்கு இறைவனாகிய தம்மிடம் விண்ணும் மண்ணும் அடங்கி நிறையப் பெற்று என்று உரை காணுவர் பழைய உரைகாரர். அஃதெங்ஙனம் எனின், மண் முதலாகக் குடிலையீறாக உள்ளனவும் பிறவுமாகிய ஆறு அத்துவாக்களும் தம்மிடம் நிறைய அதாவது ஒடுங்கப் பெற்றும், மண்ணாகிய சகல புவனங்களும் அடங்கும் வியாபகமாகிய பரம்பொருளாகியும் என விளக்கமும் காண்பர்.

மிக்காய்:- இவ்வண்ணம் தத்துவத்தோற்றமும் ஒடுக்கமும் ஆனாலும் விகாரியாகாமல் நிர்விகாரியாய், "ஒருவனே இராவணாதி பாவகமுற்றாற்போல" என்று சித்தியார் சொல்வது போல இவ்வுருவமெல்லாம் தந்தும் தன் தன்மை திரியானாய், வியாபகமாய் இருப்பன் என்பதாம். மிக்காய் என்பதற்கு இவ்வாறான தொழில்கள் எல்லாம் செய்தும், நம் போன்ற விகாரம் அடையான் என்பதை நிர் விகாரி என்ற பொருளிலே அதைப் புலப்படுத்துவர்.

விளங்கு ஒளியாய்:- பெத்தான்மாவாக அறியாமையாகிய இருளிற் சிக்குண்டு கிடந்த என்னை, தட்சிணா மூர்த்தியாக எழுந்தருளி உபதேசித்து, அத்துவித சின்மய ஆன்மாவாக்கிய சிற்பர வியோம குஞ்சித பாதமாகிய சிவஞானப் பிரகாசமாய், பெத்தான்மாவாகிய என்னை முத்தான்மாவாக்கிய சிவஞானச் சோதியாய் என்பது கருத்து. இப்பொருளில் அடியேன் விளங்குதற்குக் காரணமாகிய ஒளியாய் எனப் பொருள் காண்க.

**எண்:-** எண்ணிக்கை. ஒன்று முதலான சிற்றெண்ணும் கோடி மகாகோடி கற்பமீறான பேரெண்களுமாம். ஒன்றெனின் சூநியமாயும், சூநியம் எனின் ஒன்றாயும், கோடியெனின் கற்பம் முதலினவாயும், அவற்றின் அளவைக் கடந்திருப்பவன். எண் நிறைந்து எனப்பாடங் கொண்டு எண்ணிக்கைக்குள் அடங்கியும், அடங்காதும் அத்து விதமாய் என்று உரைப்பர் பழைய உரை ஆசிரியர்.

எல்லை இலாதான்:- இன்ன பொருளாவான் இன்ன பொருளாகான், இவ்விடத்தான், இவ்விடத்திலிரான் என்பன முதலிய வரைவு இல்லாதவன். அஃதாவது **"உலகெலாமாகி வேறாய் உடனுமாய் இருப்பவன்"** என்பது சித்தியார்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 650 ஆண்டுகள் பழமையான வரலாற்றுடன் தொடர்புடைய யாழ்ப்பாணம் மட்டுவில் கல்வத்து சந்திரமௌலீசர் கோயில்



### திருத்தல அமைவிடம்

சிவபூமியாம் ஈழத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுவில் ஊரில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புக்களுடன் வரலாற்றுப் பெருமையை தன்னகத்தே கொண்ட சிவன்கோயில் சந்திரமௌலீசர் கோயிலாகும். இக்கோயில் சாவகச்சேரியின் பிரதேச சபைப் பிரிவில் சாவகச்சேரியில் இருந்து வடமேற்குப் பக்கம் ஏறத்தாள 5 கிலோமீற்றர் தூரத்தில் கலுவம் என்னும் குறிச்சியில் **"திருவளர்திடல்"** என்று பண்டையக் காலத்திலிருந்து பேசப்படும் நிலத்தில் அமைந்துள்ளது.

### மூர்த்தி, தலம், தீர்த்தம்

**மூர்த்தி - சாந்தநாயகி உடனுறை சந்திரமௌலீசர்**

**தலமரம் - வேர்க்கோட்பலாமரம்**

**தீர்த்தம் - சந்திரத் தீர்த்தம்**

**ஆதி மூர்த்தி - தைவிகலிங்கம்**



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

### திருக்கோயில் வரலாறு

இச் சிவன்கோயில் தொன்மைபற்றி பல புராணக்கதைகள் கூறப்பட்டு வருகின்றன. வரலாற்று அடிப்படையில் மட்டுவில் ம.க.வேற்பிள்ளை அவர்கள் எழுதிய **'ஈழமண்டல சதகம்'** நூலும், அந்நூல் எழுதுவதற்கு துணையாய் அமைந்த **'யாழ்ப்பாண வைபவமாலை', 'கைலாய மாலை'** போன்ற யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்ற நூல்களும் இவ்வாலய வரலாறு பற்றி விளக்குகின்றன. இவற்றைவிட மட்டுவில் ஆ.நடராஜா எழுதிய சந்திரமௌலீசர் 'ஆலய வரலாறும் திருப்பதிகமும்' எனும் சிறு நூலும் இந்த ஆலயத்தின் வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ள உதவும் ஆவணங்களாக

விளங்குகின்றன.

புராணக்கதைப்படி சிவபெருமானை நோக்கி உமையம்மையார் தவம் புரிந்து அவரது அருட்கருணையால் இடப்பாகம் பெற்றார். இவ்வாறு உமையம்மையார் இடப்பாகம் பெற்ற இடம் திருக்கேதாரம். கேதாரகௌரியிடம் இருந்து கரும்பு வில்லையும், பஞ்சபாணங்களையும் பெறுவதற்கு கேதாரத்தில் சிவலிங்கம் ஒன்றை மன்மதன் நிலை நிறுத்தி நெடுங்காலம் வழிபட்டு உமையம்மையாரின் அருள் பெற்றான் என்று கேதாரதல புராணம் செப்புகின்றது.

சோழ அரசகுமாரன் ஒருவன் திருக்கேதாரத்திற்குச் சென்று வழிபட்ட போது, மன்மதனால் பூசிக்கப்பட்ட இலிங்கத்தைக் கண்டு அச்சிவலிங்கப் பெருமான் மீது பத்தி கொண்டு அங்கேயே தங்கி, பின்பு இலிங்கத்தைப் பிரிய மனமின்றி பெரியோர்களின் சம்மதத்துடன் தன் அரண்மனைக் கயலில் கோயிலமைத்து அச் சிவலிங்கத்தை ஆகம விதிப்படி நிலைநிறுத்தி வழிபாடியற்றி வந்தான். அப்பொழுது சோழ அரச குமாரன் தனது தந்தையாரின் தயவோடு பாண்டி நாட்டின் மதுரை நகரில் பாண்டிய அரசகுமாரர்கள் வில்வித்தை கற்கும் ஆசிரமத்தில் பயிற்சி பெற்று வில்வித்தையிலும் சிறந்து பாண்டிய மன்னனுடைய ஆதரவையும் பெற்றிருந்தான்.

இவ்வேளையில் யாழ்ப்பாணம் அரசரின்றி சீரழிந்து போனது கண்டு மனம் நொந்து திருநெல்வேலியைச் சேர்ந்த மழவராயர் தமிழகம் சென்று யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்யத் தக்கதான அரசன் ஒருவனைத் தேடி ஈற்றில் சோழ மன்னனைக் கண்டு நிலைமைகளை விளக்கி அரச குமாரனை யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வதற்கு அனுமதி பெற்றார்.

யாழ்ப்பாணம் சென்ற அவர்கள் நல்லூரில் ஒரு அரண்மனையை அமைப்பித்து சோழ இளங்குமாரனுக்கு மணிமகுடம் சூட்டி **"சிங்கையாரியச் சக்கரவரத்தி"** என்னும் விருதுப் பெயரைச் சூட்டினார். அதன் பின்பு சோழ மன்னன் தனது சிவபூசையைத் தொடர்ந்து செய்வதற்காக தனது அரண்மனை வளாகத்தில் ஓர் சிவாலயத்தை கட்டுவித்தான். சோழநாட்டில் தனது அரண்மனையில் பூசித்த மன்மத தைவிகலிங்கத்தை யாழ்ப்பாணத்து நல்லூரில் கைலாய நாதர் உடனுறை கைலாயநாயகி என்னும் திருநாமம் சூட்டி சைவாகமவிதிப்படி நிலைநிறுத்தும் சடங்கினைச் சிறப்பாக நடாத்தி முடித்தார்.

16 ஆம் நூற்றாண்டில் பறங்கியரின் படைகள் யாழ்ப்பாணத்திலிருந்த சைவாலயங்களை இடித்தளிக்கும் இழிவான செயலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவ அன்பர்கள் தாங்கள் பூசித்து வந்த தெய்வத்திருவுருவங்களைக் காப்பாற்றும் பொருட்டு காடுகளிலும் குளத்திலும் கிணற்றிலும் புதைத்து மறைத்து வைத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லூர் கைலாய நாதர் கோயில் பூசகர், நடக்க இருக்கும் அவலத்தை முன்னறிந்து மனம்நொந்து கைலாயநாதரையும், கைலாய நாயகியையும் தன் சொந்தவூரான மட்டுவிலுக்கு கொண்டு செல்லும் போது மாட்டுவண்டி பாரம் தாங்காது நின்றுவிட அங்குள்ள ஒரு கோயிலின் தீரத்தக் கிணற்றில் உமையம்மையாரின் திருவுருவைப் புதைத்து விட்டு, இலிங்கத்தை மட்டும் கிலமடைந்திருந்த சிவாலயம் ஒன்றின் திருமஞ்சணக் கிணற்றில் மறைத்து விட்டு, பூசகர் இல்லம் ஏகி சில காலம் கழிந்து அவர் இறந்துவிட்டார்.

யாழ்ப்பாணத்தை வன்னியர் ஆட்சிபுரிந்த காலத்தில் வன்னியரின் ஆட்சி அதிகாரியாகவும் சிவ பத்தியில் மேன்மை பெற்ற வன்னியசிங்க முதலியார் சொப்பனத்தில் கைலாயப் பெருமானார் காட்சியளித்து தான் மறைந்திருக்கும் இருப்பிடத்தினைக் கூறி மறைந்தார். முதலியாரும் கண்விழித்து கண்ட சொப்பனத்தை அயலவர்களிடம் எடுத்துக் கூறி கிலமடைந்திருந்த கிணற்றினைத் தோன்றி கைலாயப் பெருமானைக் கரை சேர்த்து அங்க ஓர் சிற்றாலயம் அமைத்து இறைவனுக்கு சந்திரமௌலீசர் என்றும் இறைவிக்கு சாந்தநாயகி எனவும் திருநாமத்தைச் சூட்டி வழிபாடு இயற்றி வந்தனர்.

இவ்வாறு மட்டுவில் எழுந்தருளியுள்ள எம்பெருமான், கேதாரத்தில் எழுந்தருளி பின்பு சோழநாட்டுக்கு எய்தி பின்பு, ஈழ நாட்டில் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் அருளாட்சி புரிந்து, ஈற்றில் மட்டுவிலில் நிலைபெற்று, ஈழத்துக் கேதாரராக அருள் சுரந்து வருவதாக இத்திருக்கோயில் வரலாறு கூறுகின்றது. இவ் வரலாற்றை ஆராயுமிடத்து ஏறத்தாள 650 வருடங்கள் பழைமையையும் தொன்மையையும் வாய்ந்த மூர்த்தியாக இங்கு அருள் பாலிக்கும் இறைவன் அமர்ந்துள்ளார் என்பது சிறப்பாகும்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**“சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்”**

### திருநாவலூருக்கு மீண்டுமொரு யாத்திரை

தில்லையிலிருந்து புறப்பட்ட சுந்தரர், தமது அவதாரத் தலமான திருநாவலூர் நோக்கிப் பயணிக்கின்றார். நாவலூர் மன்னரின் வருகையை அறிந்த ஊரார், நகரை அலங்கரித்து அவரை எதிர்கொண்டு வரவேற்று ஆலயத்துள் அழைத்துச் சென்றனர். அடியவர்கள் எழுப்பிய ‘அர அர’ எனும் ஆர்ப்பொலி மூவுலகிலும் எதிரொலித்ததாகச் சேக்கிழார் பெருமான் பாடுகின்றார்:

**திருநாவலூர் மன்னர் சேர்கின்றார் எனக்கேட்டுப் பெருநாமப்**
**பதியோரும் தொண்டர்களும் பெருவாழ்வு வருநாள்**
**என்றலங்கரித்து வந்தெதிர்கொண்டு உள்ளணையச்**
**செருநாகத்துரி புனைந்தார் செழுங்கோயில் உள்ளணைந்தார்**
**(ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 169)**

கருவறை இறைவனைப் பணிந்த ஆரூரர், ‘கோவலன் நான்முகன்’ எனும் பதிகத்தால் போற்றுகின்றார். அப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும், வெண்ணெய்நல்லூரில் இறைவன் தடுத்தாட்கொண்ட பேரருளை எண்ணி நெகிழ்கின்றார். குறிப்பாக, முதற்பாடலில் நாவலூரை இறைவனின் இடமாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

**கோவலன் நான்முகன் வானவர்கோனும் குற்றேவல் செய்ய**
**மேவலர் முப்புரம் தீஎழுவித்தவர் ஓரம்பினால் ஏவலனார்**
**வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆளும்கொண்ட**
**நாவலனார்க்கு இடமாவது நம்திருநாவலூரே**
**- (சுந்தரர் தேவாரம்: திருநாவலூர் - திருப்பாடல் 1)**

இப்பதிகத்தின் இரண்டாம் திருப்பாடலில், **‘வன்தொண்டன்’** எனும் வாழ்வு தந்ததை எண்ணிக் கண்ணீர் மல்குகின்றார். இது சுந்தரரின் இரண்டாம் முறை வருகையாகும். முன்ன

தாக, **'பித்தா பிறைசூடி'** பதிகம் பாடிய பின் நாவலூர் வந்து ஒரு பதிகம் பாடியுள்ளார். (திருமலைச் சருக்கம்-224). எனினும், அந்த முதல் பதிகம் இன்றும் கிடைக்க வில்லை.




இச்சமயத்தில், சுந்தரரின் பெற்றோராகிய சடையனார், இசை ஞானியார் மற்றும் அவரை வளர்த்த நரசிங்க முனையரையர் பற்றிச் சேக்கிழார் குறிப்பிடாதது வியப்புக்குரியது. தடுத்தாட்கொள்ளப்பட்ட சில திங்கள்களிலேயே இம் மூவருமே சிவபதம் அடைந்து விட்டனரோ எனும் கேள்வி எழுகிறது. இறைவன் திருவுள்ளமே இதற்கொரு விடை! இவ்வாறு தன் அவதாரத் தலத்தில் ஆதிமூர்த்தியைத் தரிசித்த சுந்தரர், மிகுந்த பத்தியோடு பதிகம் பாடி அங்கமர்ந்தார்.

### பாவ வினைகள் தீர்க்கும் கழுக்குன்றப் பரமன்

திருக்கழுக்குன்றம் எனும் இப்பதிக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளியபோது, அத்தலத்திலுள்ள சிவனடியார்கள் யாவரும் ஆறாத அன்பினோடும் அளவற்ற மகிழ்ச்சியோடும் அவரை எதிர்கொண்டு வரவேற்று வணங்கிப் போற்றினர். தம்பிரான் தோழரும் அடியவர்களின் பேரன்பில் நனைந்தவாறு, பசுமை சூழ்ந்த அப்பதியினுள் புகுந்து, அடிவாரத்திலுள்ள தாழக் கோயிலில் வீற்றிருக்கும் பத்தவத்லேசுவர மூர்த்தியையும், பின்னர் மலைக் கோயிலில் எழுந்தருளியுள்ள வேதகிரீசுவரப் பரம்பொருளையும் வணங்கித் தொழுதார்.

மலர்ச்சோலைகள் சூழ்ந்த இப்பதியில் இறைவன் வீற்றிருக்கும் அழகைக் கண்டு நெகிழ்ந்த ஆரூரர், பதிகப் பாடல்களால் அண்ணலைத் துதிக்கத் தொடங்கினார். இக்காட்சியினைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு பாடுகின்றார்:

**தேனார்ந்த மலர்ச்சோலை திருக்கழுக்குன்றத்து அடியார் ஆனாத**
**விருப்பினொடும் எதிர்கொள்ள அடைந்தருளித் தூநாள்வெண்**
**மதியணிந்த சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சிப் பாநாடும்**
**இன்னிசையின் திருப்பதிகம் பாடினார்**
**- (ஏயர்கோன் கலிக்காமர் புராணம்: திருப்பாடல் 173)**

கருவறையில் ஒளிரும் சுடர்க்கொழுந்தினைப் பணிந்த ஆரூரர், தம்மால் இயற்றப்பட்ட இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் இத்தலத்து இறைவனைத் தொழுவதால் நேரும் நன்மைகளைப் பட்டியலிடுகின்றார். குறிப்பாக, நாம் அறியாமையினால் செய்த கொடிய பாவங்கள் யாவும் நீங்கப் பெறலாம் என்பதைப் பறைசாற்றுகின்றார். அப்பதிகத்தின் முதற்பாடல் இதோ:

**கொன்று செய்த கொடுமையால்பல சொல்லவே**
**நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே**
**சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்**
**கன்றினோடு பிடிசூழ் தண் கழுக்குன்றமே!!!**
**- (சுந்தரர் தேவாரம் - திருக்கழுக்குன்றம் - திருப்பாடல் 1)**

இப்பாடலின் வழி, சுந்தரனார் மானுடர்களுக்கு ஒரு பெரும் உண்மையை உணர்த்துகின்றார். நாம் கொலை முதலான கொடிய பாவங்களைச் செய்திருந்தாலும், அவை அனைத்தும் தீர வேண்டுமாயின், தேவர் பிரானாகிய சிவபெருமான் அமர்ந்துள்ள கழுக்குன்றத்தைச் சலிக்காமல் **'சென்று சென்று'** தொழ வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

இவ்வாறு தேனார்ந்த மலர்ச்சோலைகளும், யானைக் கன்றுகளும் பிடிகளும் சூழ்ந்த குளிர்ந்த இப்பதியில், முக்கண் முதல்வரை மிகுந்த பத்தியோடு பாடிப் பரவிய சுந்தரர், அத்தலத்து இறைவனின் திருவருளைத் துணைக் கொண்டு அங்கிருந்து தனது சிவயாத்திரையைத் தொடர்ந்து மேற்கொள்கின்றார்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்**

# மும்மையால் உலகாண்ட எம்பிரான் மூர்த்தி நாயனார்





செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

பற்றற்ற எம்பெருமானின் திருவடிகளைப் பற்றி வாழ்வதே பேறாக எண்ணி, திருநீற்று நெறி ஓங்கச் செய்தவர் மூர்த்தி நாயனார். சுந்தரமூர்த்தி சுவாமிகளால் **“மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்”** என்று போற்றப்பட்ட இவர், மதுரை மாநகரில் வணிகர் குலத்தில் தோன்றினார். மதுரையில் வீற்றிருக்கும் சொக்கநாதர் மேல் பெரும் பத்தி கொண்டிருந்த இவர், தினந்தோறும் இறைவனுக்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் திருப்பணியைத் தமது முக்கிய தொண்டாகக் கொண்டிருந்தார்.

ஒரு சமயம் கன்னட தேசத்து வடுக மன்னன் மதுரையைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினான். சமண சமயத்தைச் சார்ந்த அவன், சைவர்களுக்குப் பல கொடுமைகள் புரிந்ததோடு, சிவாலயத் திருப்பணிகளுக்கும் இடையூறு விளைவித்தான். இதனால் மூர்த்தி நாயனாருக்கும் துன்பம் தொடர்ந்தது. எனினும் அவர் சந்தனத் திருப்பணியை விடாது செய்தார். அவர் மனம் மாற வேண்டும் என்று திட்டமிட்ட மன்னன், சந்தனக் கட்டைகள் கிடைக்காதவாறு சதி செய்தான்.

மதுரை முழுவதும் தேடியும் சந்தனக்கட்டை கிடைக்காததால், நாயனார் சோர்வுடன் கோயிலுக்குத் திரும்பினார். **‘சந்தனக் கட்டை கிடைக்காவிடில் என் முழங்கைகளையே அரைப்பேன்’** என்று துணிந்து, ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரித்தபடி கையை அரைக்கல்லில் வைத்துப் பலமாகத் தேய்த்

தார். தோல் தேய்ந்து, இரத்தம் பீறிட்டு, எலும்பும் நரம்பும் நைந்து வெளிப்பட்டன. இதனைச் சேக் கிழார் மிகச்சிறப்பாக,

**நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று**
**முட்டும்பரி சாயினுந் தேய்க்குங்கை முட்டா தென்று**
**வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்**
**கட்டும்புறந் தோனரம் பென்பு கரைந்து தேய**
**- (திருத்தொண்டர் புராணம் 12:15:20)**

எனத் திருத்தொண்டர் புராணத்தில் பாடியுள்ளார்.

பத்தனின் சேவையைக் கண்டு இரங்கிய ஆலவாய் அண்ணல், **“மூர்த்தியாரே, உனக்குத் தீங்கு செய்த வன் நாடு நாளை உன் வசப்படும். அதனை ஏற்று நல்லாட்சி புரிந்து இறுதியில் எமது திருவடி சேர்வாயாக”** என்று அசரீரியாகக் கூறினார். இதனை,

அன்பின் துணிவால் இது செய்திடல் ஐய உன்பால்
வன்புன்கண் விளைத்தவன் கொண்ட மண் எல்லாம் கொண்டு

**முன்பு இன்னல் புகுந்தன முற்றவும் நீத்துக் காத்துப்**
**பின்பு உன் பணி செய்து நம் பேர் உலகு எய்துக என்ன**
**- (திருத்தொண்டர் புராணம் 12:15:22)**

என அழகாக எடுத்தியம்பியுள்ளார். மூர்த்தி நாயனார் அதைக் கேட்டுத் தேய்த்தலை நிறுத்தி னார். அவருடைய கைகள் முன்போல் மாறின. சந்தனம் வாசனை சொக்கநாதர் கோயில் முழுவதும் மணத்தது. சிவனாரின் ஆணையைக் கேட்டதும் **‘சிவத்தின் விருப்பம் அதுதான் என்றால் அதனை நான் செவ்வனே செய்து முடிப்பேன்.’** என்று மனதிற்குள் எண்ணினார்.

அன்றைய இரவே வடுக மன்னன் இறக்க, சமண ஆதிக்கம் ஒழிந்தது. வாரிசற்ற அந்நாட்டின் வழக்கப் படி, பட்டத்து யானை மாலை ஏந்தித் தலைவனைத் தேடியது. அது திருவாலவாய்க் கோயிலை அடைந்து, மூர்த்தி நாயனார் கழுத்தில் மாலையிட்டு அவரைத் தன் மீது ஏற்றிக் கொண்டது. மக்கள் ஆரவாரித்தனர் மங்கல ஒலிகள் வானை முட்டின.

இதனைக் கண்டதும் அமைச்சர்கள் தங்களுடைய அரசன் தேர்வு செய்யப்பட்டதை எண்ணி மகிழ்ச்சி அடைந்து, மூர்த்தி நாயனாரை அரச பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டினர். **“சமண் நீங்கிச் சைவம் ஓங்குமானால் யான் புவி ஆள்வேன்”** என்றார். மேலும், **“எனக்குச் சடாமுடியே முடி, திருநீறே சந்தனம், உருத்திராக்கமே அணிகலன். இவற்றுடனே அரசு ஏற்பேன்”** எனக் கூறிப் பொறுப்பேற்றார்.

மூர்த்தி நாயனார், மன்னர் ஆகி சைவம் தழைத்தோங்கச் செய்தை சேக்கிழார் திருத்தொண்டத் தொகையில்,

**நுதலின் கண் விழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்**
**பதம் எங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற**
**உதவும் திருநீறு உயர் கண்டிகை கொண்ட வேணி**
**முதன் மும்மையினால் உலகு ஆண்டனர் மூர்த்தியார்**
**தாம் - (திருத்தொண்டர் புராணம் 12:15:46)**

என எடுத்தியம்பியுள்ளார்.

பொன்னாசை துறந்து முழுத் துறவொழுக்கம் பூண்ட மூர்த்தி நாயனார், உட்பகையாம் ஐம்புலன்களை யும், சமணர், வேற்றரசர் முதலிய புறப்பகையை யும் வென்று, அறவழியில் சைவநெறி ஓங்க நெடு நாட்கள் மதுரையை ஆட்சி புரிந்து, இறைப்பணிகள் செய்து, மன்னர் பலர் அடிபணிய நாடாண்டு, உல கத்தை நெடுங்காலம் ஆட்சி புரிந்த பின்னர் ஆடித் திங்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் சிவபெரு மானின் திருவடி நிழலில் உறையும் பெருவாழ்வு பெற்றார்.

இவர் அவதாரம் செய்த தலமும், முத்தியடைந்த தலமுமான மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலில் இன்றும் இவருடைய குருபூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அமிர்தகரவல்லி உடனுறை நீலகண்டேசுவரர் - திருமண்ணிப்படிக்கரை (இலுப்பைப்பட்டு)

## தேவாரப் பாடல்பெற்ற 276 சிவத்தலங்களில் காவிரி வடகரை வரிசையில் 30 ஆவது திருக்கோயில் திருமண்ணிப்படிக்கரை



**இறைவர் திருப்பெயர்:** நீலகண்டேசுவரர், படிக்கரைநாதர், மகதீசுவரர், பரமேசுவரர், முத்தீசுவரர்.
**இறைவியார் திருப்பெயர்:** அமிர்தகரவல்லி, மங்கள நாயகி.
**தல மரம்:** இலுப்பை மரம்.
**தீர்த்தம்:** பிரம தீர்த்தம், அமிர்த தீர்த்தம், மண்ணியாறு.
**வழிபட்டோர்:** சுந்தரர், பாண்டவர்கள், திரௌபதி, பிரமன், மாந்தாதா, நளன் முதலியோர்.
**பாமாலை:** சுந்தரமூர்த்தி நாயனார், அருணகிரிநாதர், வள்ளலார்.

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்
### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகம் (7.22.01):

**முன்னவன் எங்கள்பிரான் முதல் காண்பரி தாயபிரான் சென்னியில்**
**எங்கள் பிரான் திருநீலமிடற் றெம்பிரான் மன்னிய எங்கள்பிரான்**
**மறை நான்குங்கல் லால்நிழற்கீழ்ப் பன்னிய எங்கள்பிரான்**
**பழுமண்ணிப் படிக்கரையே.**

### திருத்தலச் சிறப்பு

இத்தலத்து இறைவன் சுயம்பு மூர்த்தியாக அருள் பாலிக்கிறார். பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட நஞ்சினை ஈசன் அருந்தியபோது, அதனை அமுதாக மாற்றியவள் என்பதால் அம்பிகை **"அமிர்தகரவல்லி"** என்று அழைக்கப்படுகிறாள். தன் கணவனைக் காத்த தேவி என்பதால், தீர்க்க சுமங்கலி வரம் பெற இவளிடம் வேண்டுவது சிறப்பாகக் கருதப்படுகிறது.

இக்கோயிலின் மற்றுமொரு தனிச்சிறப்பு இங்குள்ள பஞ்சலிங்கங்கள். பாண்டவர்கள் ஐவரும் தனித்தனியே

**"முன்னவன் எங்கள்பிரான் முதல் காண்பரி தாயபிரான் சென்னியில் எங்கள் பிரான் திருநீலமிடற் றெம்பிரான்"**

சிவபெருமான் ஆலகால நஞ்சினை அருந்திய போது, அன்னை உமையவள் அவரது கண்டத்தைப் (கழுத்தைப்) பற்றி நஞ்சு உள்ளே இறங்காதவாறு தடுத்தருளிய தலம். நஞ்சினை நீலமிடற்றில் நிறுத்தியதால் இத்தல இறைவன் திருநீலகண்டேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

**அமைவிடம்:** மயிலாடுதுறை மாவட்டம், தமிழ்நாடு.

வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கே மண்ணியாற்றின் கரையில் இத்தலம் அமைந்துள்ளது. மயிலாடுதுறையிலிருந்து மணல்மேடு செல்லும் வழியில் இலுப்பைப்பட்டு என்ற பெயரில் இவ்வூர் வழங்கப்படுகிறது.





இலிங்கங்களை நிறுவி இத்தலத்தில் பூசித்துள்ளனர். வீதியில் திரௌபதி வழிபட்ட வலம்புரி விநாயகரும், அவருக்கு அருகிலேயே இடம்புரி விநாயகரும் உள்ளனர். ஒரே இடத்தில் இரட்டை விநாயகர்களைத் தரிசிப்பது மிகவும் விசேடமானதாகும். இத்தலத்து தென்முகக் கடவுள் (துட்சிணாமூர்த்தி) கல்லால மரத்தின் கீழ் நந்தியின் மீது அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார்.

## திருத்தல வரலாறு

பாண்டவர்கள் வனவாசத்தின்போது இத்தலத்திற்கு வந்தனர். சிவபூசை செய்ய விரும்பிய அவர்களுக்கு இலிங்கம் ஏதும் கிடைக்காததால், ஒரு இலுப்பை மரத்தின் அடியில் இலுப்பைக்காயில் விளக்கேற்றி மனமுருகி வழிபட்டனர். அவர்கள் பத்தியால் மனம் மகிழ்ந்த ஈசன் ஐந்து மூர்த்திகளாகக் காட்சி தந்தார். தருமன் வழிபட்டது நீலகண்டேசுவரர், அருச்சுனன் வழிபட்டது படிக்கரைநாதர், வீமன் வழிபட்டது மகதீசுவரர் (16 பட்டைகளுடன் கூடிய இலிங்கம்), நகுலன் வழிபட்டது பரமேசுவரர் மற்றும் சகாதேவன் வழிபட்டது முத்தீசுவரர் ஆவர்.

புராண காலத்தில் இலுப்பை மரங்கள் நிறைந்த காடாக இருந்ததால் இத்தலம் "மதூகம்" (இலுப்பை) வனம் எனப்பட்டது. மண்ணியாற்றின் கரையில் படிக்கட்டுகளை உடைய துறையில் அமைந்ததால் **"திருமண்ணிப்படிக்கரை"** எனப் பெயர் பெற்றது. நளமகாராசன் ஏழரைச் சனியின் தாக்கத்திலிருந்து விடுபடத் திருக்கடையூர் செல்லும் முன் இங்கு வழிபட்டதாக வரலாறு கூறுகிறது.

## திருக்கோயில் அமைப்பு

மூன்று நிலைகளைக் கொண்ட இராசகோபுரத்துடன் கிழக்கு நோக்கி இக்கோயில் அமைந்துள்ளது. இது கோச் செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில் வகையைச் சார்ந்தது. யானைகள் ஏற முடியாத உயரத்தில் கருவறை அமைந்துள்ளது. கோபுர வாயிலைக் கடந்ததும் தலவிருட்சமான இலுப்பை மரம் உள்ளது.

கீழ்தளத்தில் அமிர்தகரவல்லி அம்பாள் சன்னதியும், மேல்தளத்தில் சுவாமி நீலகண்டேசுவரர் மற்றும் படிக் கரைநாதர் சன்னதிகளும் உள்ளன. வீமன் வழிபட்ட இலிங்கம் 16 பட்டைகளுடன் 'சோடச இலிங்கமாக'க் காட்சி தருகிறது. சகாதேவன் வழிபட்ட முத்தீசுவரர் தெற்கு நோக்கி அமைந்துள்ளார். கோயிலுக்கு வெளியே **'விசய விநாயகர்'** வீற்றிருக்கிறார். இங்குள்ள நடராசர் பத்து கைகளுடன் கூடிய 'பத்துக் கை தாண்டவமூர்த்தி'யாகக் காட்சியளிப்பது மிக அரிதான அமைப்பாகும்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**திருநகரச் சிறப்பு:- பாடல் - 29**

**ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை இழிந்து போந்து**
**பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி**
**"ஈங்கிதோர் பசுவந்தெய்தி, இறைவ! நின் கொற்ற வாயில்**
**தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கிய" தென்று**
**சொன்னார்.**

**பொருள்:** அவ்வோசை கேட்ட அரசன் தன் சிங்காசனத்தில் இருந்து இழிந்து போய் வாயிலில் வந்தான். வாயில் காவலர்கள் எதிரே வந்து அவனை வணங்கி **"இறைவனே! இங்கு இது ஓர் பசு வந்து நினது வெற்றி பொருந்திய வாயிலிலே தூங்கும் மணியை எய்தித் தனது கொம்பினால் அசைத்தது"** என்று சொன்னார்கள்.



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**விளக்க உரை: அரியணை இழிந்து போந்து:-** இந்நிகழ்ச்சியை நேரில் கண்டபோதே அரசிளங்குமாரன் தேரினின்றும் இழிந்து வீழ்ந்ததுபோல, அரசன் கேட்டபோதே ஐயுற்று அரியணையினின்றும் இழிந்து புறம்போந்து வாயில் நண்ணினான். இது அரசன் இயல்பு. நீரியே செய்தலினால் அரியணையில் உயர்வுடன் வீற்றிருந்தவன் அந்நிலையினின்றும் தாழ்ந்து இழிவை அடைந்தனன் என்பது குறிப்பு இழிதல் மேலே இருந்து கீழே வேகமாகக் குதித்து இறங்குதல்.

திருப்பூந்துருத்தியில் பிள்ளையாரும், அரசுகளும் மூன்றாவது சந்திப்பின்போது ஆளுடைய பிள்ளையாருடைய முத்து சிவிகையை ஆளுடைய அரசுகள் சுமந்து கொண்டு வருகின்ற போது சம்பந்தர் மேடு அருகில் வந்து பிள்ளையார் **"எங்குற்றார்"? "அப்பர் என உருகாநின்று"** உம் அடியேன் உம் அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங்கு உற்றேன்" என்று சிவிகையில் இருந்து வெளியே வருகிறார்.

அதைக் கேட்ட பிள்ளையார் மனம் எவ்வளவு பதைப்பு எய்தி பல்லக்கில் இருந்து கீழே அவர் இறங்கிய காட்சியை சேக்கிழார் பெருமான் அருளுகின்றார்.

**"பிள்ளையார் அது கேளாப் பெருகுவாரை வுடன் இழிந்தே**
**உள்ளமிகு பதைப்பெய்தி உடைய அரசினை வணங்க**
**வள்ளலார் வாகீசர் அவர் வணங்கா முன் வணங்கத்**
**துள்ளுவான் மறிக்கரத்தார் தொண்டாரலாந் தொழுதார்த்தார்"**
**- (திருநாவுக்கரசர் - 397) (மூன்றாவது சந்திப்பு)**

**தூங்கிய மணி:-** இதுவரை அடிபடும் காரணம் நிகழாததால் தூங்கிக் கொண்டிருந்த மணி என்றாலுமாம்.

**மணியைக் கோட்டால் துளக்கியது:-** தனது துயரத்தை அரசனுக்கு அறிவித்து அதற்குத் தீர்வு தேடிக்கொள்ளும் பொருட்டுச் **"சென்று மணியைக் கோட்டினால் புடைத்து"** என்று கூறிய ஆசிரியர் இங்கு முன் நிகழ்ச்சியையும் அது பற்றிய பசுவின் செய்கை யையும் அறியாத வாயில் காவலர்கள் வாக்கில் வைத்துக் கூறினாராதலின் புடைத்து என்னாது துளக்கியது என்றார். புடைத்தல், அடித்தல், துளக்குதல், அசைத்தல் என்று ஐயா அவர்கள் உரையில் வைத்துப் போற்றுகின்றார்.

மன உணர்வில்லாத பசு மணியை எப்படி அடிக்கக்கூடும்? எனின் ஐயா அவர்கள் அதற்கான மூன்று காரணங்களை உரையில் கூறுகின்றார்.

1. மனிதன் தன் வரவு காணாத வண்ணம் கன்றைச் செலுத்தியும், மனிதர் காட்சிப் புலனை மறைத்ததும், செய் வித்தது இறைவனது திரோதான சத்தியாகிய மறைப்புச் சத்தியேயாகும். இஃதே பசுவையும் இப்படி அடிக்கச் செய்தது.

2. இறைவனுடைய நீதி என்கிற அறக்கடவுளே இவ்வாறு பசுவாய் வந்தது என்ற வரலாறும் காணப் பெறும். **"தனிப்பெருந் தருமம்"** என்று 22வது பாடலில் கூறியதும் காணலாம்.

3. புண்ணிய பாவங்களுக்கு ஈடாக ஓர் ஆன்மா பலபல உடல் எடுக்கும். மாபுராணங்களில் புலி, வானரம், நாகம், ஈ, எறும்பு, கழுதை, முதலிய அஃறிணைகளும், பூர்வ சென் மத்தில் எஞ்சி நின்ற கருமம் காரணமாக இழிந்த பிறவிய டைந்தாலும், புண்ணியச் சிறப்பினால் ஈசனை அறிந்து பூசை செய்தன என்ற அறிகின்றோம். அதுபோலவே இப்பசுவும் அறிவு விசேடத்தினால் சிறந்த உயிர் என்று அரசர் **"எவ்வுல கில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம்குடரால் வெவ்வுயித்துக் கதறிமணி அறிந்து வீழுந்தது? விளம்பீர் (40 வதுபாடல்)** என்று உரைத்தால் விளங்கலாம்.

அங்கு நின்ற அமைச்சர்களை அரசன் இகழ்ச்சி யோடு நோக்க முன்னமே இந் நிகழ்ச்சி முழுவதும் அறிந்த வனாகிய தொன்னெறி அமைச்சன்அரசனை வணங்கிப் பின்வருமாறு சொல்லானாயினான்.

**பாடல் - 31**

**"வளவநின் புதல்வன் ஆங்குஓர் மணிநெடும் தேர்மேல் ஏறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுஉலாம் தெருவில் போங்கால்
இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தது இத் தன்மை என்றான்."**

**பொருள்: "அரசரே! உம்முடைய புதல்வன் அங்கு ஓர் அழகிய பெரிய தேரின்மேல் ஏறிக்கொண்டு அநேகம் தேர்ப்படைகள் தன்னைச் சூழ்ந்துவர அரசர்கள் உலாச்செல்லும் தெருவிலே உலாப்போகுங் காலத்தில் இளைய பசுக்கன்று தேர்க்காலின் உள்ளே புகுந்து இறந்துபட்டது என்ற அஃது அவ்வாறாகவே தளர்வுறுகின்ற இந்தத் தாய்ப்பசு இங்கே வந்து இத் தன்மையைச் செய்தது"** என்று சொன்னான்.

**விளக்க உரை: வளவன்:-** சோழன் வளத்தை உடை மையின் வளவன் எனப்பட்டான். வளத்தன் – மாவளத்தன் – பெருமாவளத்தன் (பட்டினப்பாலை) வளைவு – வளைவு உலகைத் தன் ஆணையால் வளைத்து ஆள்பவன்.

**புதல்வன்:-** மகன் மூதாதைகளைப் புத் என்னும் நகரத்திலிருந்து எடுப்பவன்.

**தேர்க்காலிடைப் புகுந்து:-** தேர்க்காலுக்கும் நிலத்துக்கும் இடையிலே புகுந்து கன்று தேர்க்காலினுள் புகுந்து கொண்டதேயன்றித் தேர்க்கால் அதன்மேல் செலுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டபடி.

தேர்மேல்ஏறி என்றதனால் கீழேவரும் அபாயம் தெரிந்து விலக்கமுடியாத நிலையென்றும்: தானைசூழ என்றத னால் அபாயம் வராது காக்கப் பல காவல்களும் இருந்தன என்றும்: அரசுலாந்தெரு என்றதனால் பசுக்கூட்டம் செல்லு மிடமன்று அரசகுமாரன் ஒரு சிறிதும் பொறுப்புடையவன் அல்லன் என்பதைத் தான் அரசனுக்கு விடை சொல்லும் முகத்தாலயே அறிவிக்குமாறு உட்குறிப்புகளுடன் மந்திரி கூறினமை காண்க என்று உரையாசிரியர் சிவக்கவி மணி ஐயா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அமைச்சுத் திறத்தின் சிறப்புக்கள எல்லாம் இவ்வமைச்சனிடத்துப் பொருந்தியதோடு இவ்வாசிரியரிடத்தும் பொருந்தி யிருந்தமை இங்கே உயர்ந்து உணர்த்தற்பாலது.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி
நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**முருகப்பெருமானுடைய வாகனங்களில் இந்திரமயிலையும் சூரபன்மன் மயிலையும் வேறுபடுத்திக்காட்டும் உருவ அமைப்பு வேறுபாடு ஏதேனும் உண்டோ?**

உண்டு! இந்திரமயிலின் முகம் முருகப்பெருமானின் இடப்பக்கத்தைநோக்கியவாறுதிரும்பியிருக்கும்.சூரபன்மன் மயிலின் முகம் முருகப்பெருமானின் வலப்பக்கம் நோக்கியவாறு இருக்கும்.

**முருகப்பெருமானுக்குக் கோழிக்கொடி முன்னரே விளங்கியவொன்றா? அல்லது சூரபன்மன் கோழிக்கொடி ஆகியது முதல் கோழிக்கொடி உடையோன் என்னும் சிறப்புப் பெற்றானா?**

முருகப்பெருமான் தொடக்கத்தில் தேரில் நின்றே போர் செய்தார். அச்சமயம் அத்தேரின் கொடியாக அக்னி தேவன் கோழிவடிவம் கொண்டு விளங்கினான் என்பதுவே கந்தபுராண முடிவாகும். எனவே, எவ்வாறு மயிலும் முதலே விளங்கியதோ, அஃதுபோல் கோழிக் கொடியும் முதலே விளங்கியது.

**முருகப்பெருமானுக்கு வேலாயுதத்தைக் கொடுத்தது உமாதேவியாரா? சிவபெருமானா?**

சிவபெருமானே வேலாயுதத்தைப் படைத்து முருகப்பெருமானின் திருக்கரங்களில் கொடுத்தருளினார் என்பதுவே கந்தபுராண முடிவாகவுள்ளது.

**ஆயதற் பின்னர் ஏவில்ஃமூ தண்டத் தைம்பெரும் பூதமும் அடுவ**
**தேயபல் லுயிரும் ஒருதலை முடிப்ப தேவர்மேல் விடுக்கினும் அவர்தம்**
**மாயிருந் திறலும் வரங்களுஞ் சிந்தி மன்னுயிர் உண்பதெப் படைக்கும்**
**நாயக மாவ தொருதனிச் சுடர்வேல் நல்கியே மதலைகைக் கொடுத்தான்**
**(1303)**

**பொருள் :-** அதற்குப் பிறகு, செலுத்தினால் முழுமையான அண்ட கோளத்தில் உள்ள பெரிய பஞ்ச பூதங்களையும் அழிக்கவல்லதும், உலகில் பொருந்தியுள்ள பலவகை உயிர்களையும் ஒருசேர அழிக்கவல்லதும், யார்மீது செலுத்தினாலும் அவர்களுடைய சிறந்த வலிமையினையும் அழித்து நிலை பெற்ற உயிரைக் கொல்வதும், எல்லா ஆயுதங்களுக்கும் தலைமை வகிக்கும் சிறப்புள்ளதுமான – ஒளி பொருந்திய – ஒப்பற்ற ஒரு வேலாயுதத்தை உண்டாக்கி, அதனைப் புதல்வன் முருகப்பெருமான் திருக்கையில் சிவபெருமான் கொடுத்தருளினார்.

சிவபெருமானின் அருளே உமாதேவியார் எனப்படும். சிவபெருமானுக்கும் சிவபெருமானின் அருளுக்குமான சம்பந்தமானது நெருப்பும் அதன் சூடும் போன்றதாகும். இஃது தாதான்மிய சம்பந்தம் எனப்படும். சிவாலயங்களில் மூலட்டானத்தில் விளங்கும் சிவலிங்கம் என்பது சிவபெருமானும் உமாதேவியாரும் இணைந்து விளங்கும் வடிவமேயாகும். இலிங்கமாகச் சிவபெருமானும் ஆவுடையாராக உமாதேவியாரும் சிவலிங்கத்திருமேனியில் போற்றப்படுவர். சிவபெருமானுக்கும் சிவபெருமானுடைய அருளுக்கும் பேதம் சைவத்தில் பாராட்டப்படுவதில்லை. சாக்தம் இம்மரபைப் பேணுவதில்லை. சுமார்த்தமதத் தாக்கத்தினால் சாக்தமரபுகள் பண்டைய சிவபரத்துவ வாமமார்க்கத்திலிருந்து பிறழ்ந்து நிற்பது கண்கூடு. இச்சாக்தமார்க்கத் தாக்கத்தினாலேயே, உமாதேவியாரிடமிருந்தே முருகப்பெருமான் வேலாயுதத்தைப் பெற்றுக் கொண்டார் என்னும் காட்சித்திணிப்பு திருக்கோயில்களில் புகுத்தப்படலாயிற்று எனத் தெளிதல் சைவருக்கு நன்றாகும்.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# History and Meaning of Thaipoosam

Thaipoosam is one of the most significant festivals in the Tamil religious calendar, dedicated to Lord Murugan, the embodiment of valour, wisdom, and spiritual discipline. Though today it is observed by Saiva Tamils across the world, from Tamil Nadu and Sri Lanka to Malaysia, Singapore, South Africa, Australia, and beyond, Thaipoosam remains deeply rooted in ancient Saiva consciousness.

The festival is observed on the day when the Poosam Nachathiram (star) coincides with the full moon during the Tamil month of Thai (January–February). This celestial alignment is not incidental. In Tamil spiritual thought, the convergence of lunar fullness and Poosam signifies spiritual ripeness, a moment when devotion, austerity, and divine grace are believed to align most powerfully.

One of the most visually striking and spiritually intense practices associated with Thaipoosam is Kavadi Aattam. Often misunderstood at first glance, Kavadi is a voluntary act of sacrifice undertaken by devotees as a form of penance and spiritual purification. Devotees carry kavadi structures or pierce their bodies, including the skin, cheeks, or tongue, using the vel, the spear of Lord Murugan. Far from being acts of self-harm, these rituals are grounded in discipline, fasting, prayer, and mental restraint. Pain is not the objective; transcendence is. The body becomes a vessel through which spiritual "debt" is symbolically surrendered, allowing the devotee to move closer to inner clarity and grace.

Thai Poosam's ancient nature is firmly attested in classical Tamil Saiva literature. The festival is explicitly mentioned in the Thevaram hymns of Thirugnana Sambanthar, one of the revered Saiva Nayanmars. In a hymn praising Lord Sivan of Kapaleeswarar Temple in Mayilapore, Sambanthar alludes to the Thaipoosam festival celebrated with great fervour:

மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.

This song provides the meaning:

Sivan who dwells with desire in Kapālīccaram and who is in the form of the sacred ash, in the great mayilai where beautiful ladies who coat their bright eyes with collyriyum gather together. Do you go without seeing the festival in pūcum in the month of Thai when ladies wearing suitable jewels celebrate the festival with white rice soaked in ghee?

This song highlights the cultural beauty and significance of the festival. Not only this, the verse establishes that Thaipoosam was already a recognised and celebrated religious observance during the early medieval period, embedded within Tamil Saiva ritual life.

In addition, if we take a deeper look into the song we are able to realise that this song is alluding to practises that Tamils around the world now celebrate as Thai Pongal. Hence there is enough evidence within this song to suggest that the origins of Thai Pongal is actually the Saiva festival of Thaipoosam

# Saiva Saint Murthi Nayanar - The Ruler




The vital account of Murthi Nayanar, the 14th Saivite Nayanar in the Periya Puranam, is situated in Madurai, a city historically associated with Pandya rule, Tamil literary activity, and astonishing institutional Saivam. Madurai Sundareswarar Temple, located at the centre of the citadel, functioned not only as a religious space but also as a focal point of civic and cultural Tamil life. Within this environment, religious service was embedded in daily order and public continuity as opposed to being confined to private self-centered belief.



Srisankarshan Srisatkunarajah
English Editor
Thennadu

The Periyapuranam sings Murthi Nayanar as a merchant who undertook a clearly defined religious service: the daily preparation and offering of Santhanam (sandalwood paste) for daily Lingam anointment. Puranam's narrative emphasises the regularity of this service rather than its emotional content, showing that what matters is not emotional intensity of devotion, but consistency. The act acquires the character of an obligation, that which is performed without interruption, personal interpretation, or adaptation. One might call this 'surrender'.

### The test

This stability is disrupted by a change in political authority. A ruler from Karnataka

defeats the then Pandya king and takes control of Madurai with all its habitual extensions arrested therewith. The new ruler, identified in the text as a practitioner of Jainism, imposes restrictions on Saivite practices and deliberately obstructs access to materials required for worship. The Periya Puranam presents this intervention as an exercise of sovereign power over religious life, here serving as one of the mildest illustrations of how political authority can intrude upon established ritual systems. It always got worse from there, with the second step usually being complete carnage over heritage sites and communities of worship.

The central episode of Murthi Nayanar's account arises from this conflict. When sandalwood becomes unavailable by royal order (first slip along the slope), the service he performs can no longer be completed through ordinary means. Rather than suspend the ritual, Murthi Nayanar continues it by using his own body, in absolute protest, grinding his hands & elbows on the stone. One must take note that the text does not linger on the physicality of the act; instead, it frames the moment as a question of obligation under constraint (questioning if it was a reaction/protest or an act of devotion with no political strategy). The act asserts that the duty itself remains intact even when lawful access to materials is withdrawn, handing the power to answer that question to the greater and timeless clan of devotees.

Divine intervention interrupts the act, halting the injury and announcing a forthcoming change in political authority. As per the foretelling, the oppressive ruler passes with no successor, establishing a heavy vacuum of governance. The ministers trigger protocol and follow a recognised Pandian civic-religious custom, by sending a temple elephant through the city to identify the next ruler. The elephant (as per divine command) selects Murthi Nayanar.

Murthi Nayanar's acceptance of kingship was conditional and the conditions were famously important. He agreed to rule only if Saivam was to be practiced freely, and he explicitly refused royal insignia, choosing instead to retain sacred ash, Uruthiraakka beads, and matted hair. Kingship, in this account, is a role absorbed within his religious passion. From civic service to kingly authority, everything is exercised without altering the underlying framework of obligation.

### Remembrance

Murthi Nayanar's account concludes with the Nayanar relinquishing the throne and attaining liberation. The emphasis remains on continuity through trailblazing highs, high enough to make one fundamentally change. The lesson of remaining grounded and ever humble, is remembered by Sivan Adiyarhal across generations, on Aadi Karthikai.

# தைப்பூச விழாக் காணும் சங்கமன்கண்டி மலைக்குமரன்!



கதிர்காமப் பாதயாத்திரையில் தென்கிழக்கிலங்கையின் காட்டுவழி நோக்கி செல்பவர்கள் திருக்கோவிலை அடுத்துச் சென்றுசேரும் பதி சங்கமன்கண்டி. மட்டக்களப்பு – பொத்துவில் பெருந்தெருவில் திருக்கோவிலுக்குத் தெற்கே சரியாக 13 கிமீ தொலைவில் அத்திருத்தலம் அமைந்துள்ளது. மரபாக அதை **“திருக்கோவிலிருந்து ஒருகாமூச்சு”** என்பார்கள். கதிர்காமப் பாதயாத்திரையின் போது பொருட்களை காவுதடியில் (கர்) சுமந்து செல்வோர் நடைக் களைப்புத் தீர தங்கியிருந்து மூச்செடுக்கும் – ஓய்வெடுக்கும் தூரம் தான் ஒருகாமூச்சு.

சங்கமன்கண்டி என்பது இங்குள்ள சிறுகுன்றின் பெயர். சிங்களத்தில் கந்த என்பது மலை. சங்கமன் கந்த என்றால் சங்கமனின் மலை என்று பொருள். ஆனால் தமிழில் கண்டி என்பது மலைப்பள்ளத்தாக்கு, ஒடுங்கிய பாதை, நுழைவாயில், மேடான இடம் என்றெல்லாம் பொருள் கொண்ட சொல். அதனாலேயே மலைநாட்டில் ஒடுங்கிய பாதையோரம் உருவாகி எழுந்த நகரொன்றும் அப்பெயரைப் பெற்றது. பொலிகண்டி, கோவிலாக்கண்டி என்று இடங்களெல்லாம் வட இலங்கையிலும் உள்ளன. எனவே சங்கமன்கண்டி என்பது சங்கமனின் நகரம் என்று பொருள். யார் அந்த சங்கமன் என்பதில் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. பண்டையகால நாக மன்னனென்றும், மட்டக்களப்பின் சிற்றரசனொருவன் என்றும் பலர் சொல்லுவர். தொன்றுதொட்டு அப்பெயர் இப்பகுதி மக்களால் சங்குமண்கண்டி, சங்குமக்கண்டி, சங்கமான்கண்டி என்றெல்லாம் பல்வேறு விதமாக அழைக்கப்பட்டு வந்துள்ளது.

நாமெல்லோருமே பாடசாலைக் காலத்தில் இலங்கையின் நீளம், அகலம் சொல்லும் போது, வடக்கு தெற்காக பருத்தித்துறை முனை, தெய்வேந்திரமுனை என்றும், கிழக்கு மேற்காக சங்கமன்கண்டிமுனை, கொழும்பு முனை என்றும் அளந்திருப்போம். ஆக, இலங்கையின் அதிகிழக்கில் இருக்கும் புள்ளி இம்மலை. எனவே கடல் வழி ஆக்கிரமிப்பு, படையெடுப்புகளை இலகுவாக அடையாளம் காணக்கூடிய புவியியல் முக்கியத்துவமும் இம்மலைக்கு இருந்தது. இன்றும் இம்மலையுச்சியில் நின்றால் நெடுந்தொலைவு கடலைக் கண்காணிக்க முடியும்.



சைவத்திரு.
விவேகானந்தராஜா
துலாஞ்சனன்
(பொதுச்செயலாளர்
இலங்கைச்
சைவநெறிக் கழகம்)

சோழர்கள் சங்கமன்கண்டி மலைக்கு வடக்கே இருந்த சாகாமம் வரை இலங்கையில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினார்கள் என்கின்றது மகாவம்சம். ஒல்லாந்தர் காலத்தில் பழைய மட்டக்களப்புப் பகுதி “ஏறாவூர் தொடக்கம் சங்கமன்கண்டி வரை” என்றே எல்லை வகுக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் சங்கமன்கண்டியோடு மட்டக்களப்பின் தென்பகுதியான அக்கரைப்பற்று முடிவடைந்து பாணமைப்பற்று தொடங்குகிறது. பாணமைப்பற்று கண்டி அரசோடு நேரடித் தொடர்பு கொண்ட பகுதி. பாணமையில் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த சமரபாகு என்பவன், போர்த்துக்கேயரின் உதவி பெற்று கண்டி அரசன் செனரத்தை (1604 – 1635) ஆட்சி கவிழ்த்து கண்டி அரியணையில் ஏறுவதற்காக சதித்திட்டம் தீட்டும் அளவு பலம் கொண்டிருந்தான் என்றால் பார்க்கலாம்.

இப்படி பாணமை ஆரம்பத்தில் மட்டக்களப்புத் தமிழரசின் கீழ் நேரடியாக இருந்ததில்லை என்பதால் சங்கமன்கண்டியே அதன் தென்னெல்லையாக இருந்தது. பதினேழாம் நூற்றாண்டில் திருக்கோவில் ஆலயத்துக்குரிய எருமை மாட்டுத் தொழுவம் ஒன்று இம்மலையில் அமைந்திருந்தது. விந்தையாக, கண்டி என்பது தொல்காப்பிய காலத்திலிருந்தே எருமைக்கடாவைக் குறிக்கும் சொல். சோழர் காலத்திற்குப் பின் காலிங்க மாகோன் காலத்தில் வீரசைவ





வழிபாட்டு மரபுக்குள் வந்துவிட்ட திருக்கோவில் ஆலயத்தில் **"சங்கமர்"** எனும் வீரசைவக் குருக்களே பூசனையாற்றி வந்திருக்கிறார்கள். என்றால் சங்கமரின் + கண்டி பராமரிக்கப்பட்ட மலை தான் சங்கமன்கண்டி மலையா?

சிவபூமியாகிய இலங்கையில் வடக்கே கரம்பகம், மேற்கே முனீச்சரம் என்று எல்லை வகுக்கப்படும் திருக்கோணேச்சரப் பெருமானின் தனிப்பெரும் ஆட்சிக்குத் தென்னெல்லையாக சங்கமன்கண்டியைக் கருதும் ஒரு மரபும் நீடித்து வருகிறது. இங்கு பண்டு ஒரு சிவன்கோயில் அமைந்திருந்ததாகவும் ஒரு தொன்நம்பிக்கைக் கதை விளங்குகின்றது. மகாசேனன் கிழக்கிலங்கையில் இடிப்பித்து விகாரங்களாக மாற்றிய சிவாலயங்களில் ஒன்றான ஏரகாவில் இங்கு தான் இருந்தது என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ள போதும் அதை மெய்ப்பிக்க சான்றுகள் போதுமாகக் கிடைக்கவில்லை. தொல்லியல் சான்றுகள் கிடையாத இன்னொரு தொன்நம்பிக்கைக் கதை, சோழரிடமிருந்து இலங்கையை மீட்ட விசயபாகு மகாராசாவிற்கு திரிலோகசுந்தரி எனும் கலிங்க நங்கை பட்டத்தரசியாக இருந்தாளென்றும், சைவசமயம் சார்ந்திருந்த அவள் உரோகண நாட்டின் நடுவே அமைந்திருந்த சங்கமன்கண்டியில் அரண்மனை அமைத்துத் தங்கியிருந்து அங்கோர் சிவாலயம் இயற்றி வழிபட்டு வந்தாள் என்றும் சொல்லுகின்றது. சங்கமன்கண்டிக்கு மேற்கே ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்ட கட்டடச் சிதைவுகளும் தொல்லியல் இடிபாடுகளும் இன்றும் காணப்படுகின்றன.

சங்கமன்கண்டி மலைக்கு மேற்குப்புறம் அக்குன்றைவிட உயரமான இன்னொரு மலை அமைந்துள்ளது. அதை மகாதுவட்டா மலை என்றும் துவட்டா எனும் முனிவரொருவர் அங்கு தங்கி தவமியற்றி வந்ததாகவும் அவர் வசித்த குகை இன்றும் அங்கு இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். அம்மலைச் சாரலில் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஏராளமான துறவிகள் தங்கித் தவமிருந்து வந்திருக்கிறார்கள். அப்படி இங்கு இறுதியாகத் தங்கியிருந்த மயில்வாகன சாமியார் என்பவரின் சமாதி இன்றும் காட்டுப்பிள்ளையார் கோயிலருகே அமைந்துள்ளது. அம்மலையிலும், அம்மலையைத் தாண்டி மேற்கே பெரிய பரப்பில் காணப்படும் பழங்காலக் கட்டட இடிபாடுகளுக்கு நடுவிலும் மனித அறிவிற்கு அப்பாற்பட்ட பல்வேறு சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் சொல்லுகிறார்கள். அப்படிப் புகழ்பெற்ற ஒரு கதை இன்றும் இந்தக் கோயிலின் அருகே உள்ள ஊர்களில் வாய்மொழிக் கதையாக சொல்லப்பட்டு வருகின்றது.

அது ஒரு சித்திரை நிறைமதி. இந்தப்பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த தம்பிலுவில்லைச் சேர்ந்த ஒருவர் தன் மாடொன்றைக் காணாமல் தேடிவந்தபோது அவருக்கு வழி தவறிவிட்டது. மெல்ல இருட்டிவர அவரைப் பயம் பிடித்துக்கொண்டது. அங்கும் இங்கும் வனவிலங்குகளின் ஓலம். தூரத்தே ஒரு இடிந்த மண்டபம் ஒன்று தென்பட்டதால், அங்கே ஓடிச்சென்று ஒதுங்கிக்கொண்டார். வீட்டில் தனக்காக உணவு சமைத்துக் காத்திருக்கும் மனைவி, பிள்ளைகளின் முகம் கண்முன் எழுந்தது. **"இங்கிருந்து எப்படி வெளியேறுவது, எப்படி ஊர் திரும்புவது, சிவசிவா வழிகாட்டு"** கண்ணீர் வழிய இறைவனைப் பிரார்த்தித்தார். கண் திறந்தபோது காவியுடையும் தாழ்வடக்க மாலையும் அணிந்த ஒருவர் தன் முன் புன்னகையுடன் நிற்பதை அவர் கண்டார். **"வழிதவறிவிட்டாயா, சரி. உனக்கு இரண்டு வாய்ப்புகள். திரும்பிப்பார்க்காமல் நேரே நடந்தாயென்றால் கொத்துமுறித்துப் போட்டிருக்கும். அந்த வழியில் சென்றால் மலையடிவாரம் வரும். அங்கு நிற்கும் உன் ஊரவர்களோடு இணைந்துகொள்ளலாம். நாளை காலை வந்து மீண்டும் உன் மாட்டைத் தேடி பிடித்துச் செல்லலாம். அல்லது இங்கேயே இரவு தங்கியிருக்கலாம். காலையில் உனக்கு மாடு கிடைக்கும். என்ன செய்யப்போகிறாய்?"**

கும்மிருட்டில் தனியே காட்டுக்குள் நடப்பதை நினைக்க அவருக்கு குலை நடுங்கியது. **"தனியப்போக பயமாய் இரிக்கி. காலமே மாட்டோடயே போறன்"**

**"சரி. இங்கு இன்றிரவு தங்கிவிட்டுச் செல். ஆனால் ஒரு நிபந்தனை இங்கு நடக்கும் எதையும் நீ யாருக்கும் சொல்லக்கூடாது. இது என் கட்டளை!"** அவர் ஒப்புக் கொண்டு தலையாட்டினார்.

முழுநிலவு எறிக்கத் தொடங்கியது. நல்ல அகிற்புகை வாசம் வீசியது. நேரம் ஆக ஆக, அந்த இடத்தில் மெல்ல மெல்ல வெளிச்சம் பரவுவதையும் தனக்கு வழிகாட்டியவர் போலவே ஏராளமான சாமியார்கள் அங்கு ஒன்றுகூடுவதையும் அவர் கண்டார். யாரோ வரிசையாக தாமரையிலைகளைப் பகிர, பந்தியில் அமர்ந்து உணவுண்ணுமாறு அவர் பணிக்கப்பட்டார். அருகிலிருந்த மடுவில் கை கழுவி நிலவொளியில் பரிமாறப்பட்ட உணவைக் குழைத்து வாயில் வைத்தார். அப்பப்பா! அப்படி ஒரு உருசியான உணவை அவர் உண்டதே இல்லை. இதென்ன இப்படி தேவாமுறுதம் போல தித்திக்கிறது! ஒருகணம் அவரில் சராசரிக் குடும்பத்

தவன் எழுந்தான். அடடே, வீட்டில் மனைவி பிள்ளைகள் இந்த அமுதை உண்டால் என்னென்னவெல்லாம் சொல்லி மகிழ்வார்கள். அரைக்கண்ணால் இருபுறமும் அமர்ந் திருந்தவர்களைப் பார்த்துவிட்டு மெல்ல தன் வேட்டித்துணி யில் அந்த சாப்பாட்டைக் கிள்ளி வைத்து முடிந்துகொண் டார். அருகில் இருந்தவர் ஏதோ எண்ணி சத்தமிட்டுச் சிரிக்க, திடுக்கிட்டுத் திரும்பி ஒன்றும் நடவாதது போல் இலையை வழித்து உண்டு கைகழுவினார்.

அந்தத் தண்ணீர் சாப்பாட்டின் உருசியை இன்னும் கூட்டியது போல் இருந்தது. கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்தது. இரத்தநாளங்களில் ஏதோ சுற்றிச்சுற்றி போதை போல் ஏறி தலைக்குள் வெப்பமான நீர்க்குமிழிகள் வெடித்தன. பளிச் சென்று மின்னல் போல் ஏதோ வெட்ட, கண்ணை மூடித் திறந்தவர் திகைத்தார். அவர் அமர்ந்திருந்தது ஒரு இடிந்த கட்டடம் அல்ல் அது ஆயிரங்கால் மண்டபம்! பொன்னும் மணியும் பூட்டி தகதகவென மின்னிக்கொண்டிருந்த தூண்கள், வண்ண மலர் மாலைகள், நட்சத்திரங்களென மின்னிக் கொண்டிருந்த பாவை விளக்குகள். தன்னிருபுறமும் அமர்ந் திருந்தவர்கள் அணிமணி ஆபரணாங்கள் சூடிய தேவர்கள் என்பதை அவர் கண்டார். தானும் பட்டாடை சூடியிருப்பதை, தேவவடிவம் கொண்டிருப்பதை உணர்ந்தார். வானிலிருந்து அரம்பையர் வந்திறங்கினர். ஆடலும் பாடலும் தொடங்கியது. கிண்கிணி துந்துபி முழங்கியது. அவர் என்றும் முகர்ந்திராத சுகந்தத்துடன் மலர்கள் சொரிந்தன. சட்டென அரகர ஓசை எழ, ஆயிரங்கால் மண்டபத்தின் மறு அந்தத்தில் திரை விலகி, தீபாராதனையில் ஓங்கி உயர்ந்த சிவலிங்கம் ஒளிப்பிழம்பென மின்னித் தெரிந்தது. பறையும் தம்பட்டமும் உச்சகதியில் ஒலித்தன. அவர் விக்கித்துப் போனார். அந்த நிகழ்வின் இன்பம் தாங்கமாட்டாமல் மேனிசிலிர்த்து சிவசிவா என்று கண்ணீர் விட்டுக் கதறினார். கைகூப்பித் தொழுது அரற்றி னார். தேவகணங்களுடன் இணைந்து ஆடிப்பாடியபடியே மெய் சோர்ந்து மெல்லச் சரிந்தார். கண்கள் சொக்கி மூடின.

முகத்தில் சூரிய ஒளி சுட்டு அவர் தலைவலியுடன் எழுந்த போது, அவருக்கு அருகே அவரது காணாமல் போன மாடு "அம்மா" என்று முக்காரமிட்டு கழுத்து மணி அசைய தலையாட்டிக்கொண்டிருந்தது. திடுக்கிட்டு எழுந்து அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். நன்கு விடிந்திருந்தது. அவர் அதே உடைந்த மண்டபத்தின் தூணொன்றில் சாய்ந்திருந்தார். முதனாள் அணிந்திருந்த கல்லும் முள்ளும் கிழித்த அதே வேட்டி. சுற்றிவர அதே காடு, அதே இருள். அவர் இரவு அனுபவித்த விடயங்கள் நடந்ததற்கான தடயங்கள் எதை யுமே காணோம். ஆனால் அவருக்கு முன்புறமாக யாரோ கொத்து முறித்துப் போட்டிருந்தார்கள். தான் கனவேதும் கண்டேனா? ஆனால் யார் இந்த மாட்டைக் கொணர்ந்து விட்டார்கள்? அந்த சாமியார் சொன்னமாதிரி எனக்கு வழி காட்டுவதற்காக காட்டுமரக் கிளைகளை வேறு கொத்து



முறித்துப் போட்டிருக்கிறதே!

சட்டென ஏதோ நினைவுவர, தன் இடுப்பைத் தடவிப் பார்த்தார். அடிவயிறு சில்லிட்டது. அங்கு அவர் முதனாள் இரவு முடிந்துவைத்த அமுது முடிச்சு இருந்தது! என்றால்.... என்றால்.... அது உண்மை, அத்தனையும் உண்மை, அவர் இரவு அங்கு வந்தது, சாமியார் தன்னை அமரச்சொன்னது, இன்னும் பல சாமியார்கள் வந்தது, எல்லோரும் சுவையான அமுதுண்டது... இதோ உண்மைக்குச் சாட்சியும் இருக்கி றது... ஆனால்... அமுதுண்ட பின்னர் கண்ட அந்த மயிர் கூச்செறியும் காட்சிகள்.... தேவர்கள், அரம்பையர், முனி வர்கள், வாத்தியங்கள், நடனங்கள், அதெல்லாம் உண்மை இல்லையா? ஆகா, என்னையாளும் அப்பனை அத்தனை உயரத்தில் பேருருவச் சிவலிங்கமாகத் தரிசித்தேனே.. அது உண்மை இல்லையா? ஐயோ தலைவலிக்கிறதே!

அவருக்கு அதற்கு மேல் அங்கு நிற்பதற்கு அச்சமாக இருந்தது. வேகமாக மாட்டை இழுத்துக்கொண்டு "கொத்து முறித்துப்" போடப்பட்டிருந்த வழியில் வேகமாக ஓடினார். சீக் கிரமே சங்கமன்கண்டி மலையடிவாரத்தை வந்தடைந்தார். வேகவேகமாக மாட்டை காளையடியில் கட்டிவிட்டு வீட்டுக்கு சிட்டாகப் பறந்தார்.

இரவெல்லாம் அழுதழுது வீங்கிச் சிவந்த கண்களுடன் மனைவி வாசற்படியில் அமர்ந்திருந்தாள். நன்கு விடிந் திருந்ததால் உறவினர்களெல்லாம் கூடிநின்றார்கள். அவரைக் கண்டதுமே தலைவிரிகோலமாக ஓடிவந்து கட்டியணைத்து அழுதாள். அடுத்த கணமே தோளில் அறைந்து திட்டினாள் "ஐயோ மனுசா... எங்க கிடந்து வாறாய்.. உன்னக் காணாம எங்கெல்லாம் தேடுற...." ஒருகணம் நடந்ததெல்லாம் பெரு மிதத்துடன் சொல்ல வாயைத் திறந்தவர் அடுத்தகணமே அந்த முனிவரின் எச்சரிக்கை நினைவில் வர மெல்ல வார்த் தைகளை விழுங்கினார்.

(தொடரும்...)

திருச்சிற்றம்பலம்

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆதிரை அருட்காட்சியும் திருவீதியுலாவும் (03-01-2026)



தென்னாட்டில் பொங்கல் பானைகள் வழங்கல் (14-01-2026)



ஆதிரைத் திருமஞ்சனம் (02-01-2026)





தைப் பொங்கல் வழிபாடுகள் (15-01-2026)





தென்னாடு கோசாலை பட்டிப் பொங்கல் (16-01-2026)



# தென்னாட்டு நிகழ்வுகள்



**மார்கழித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (03-01-2026)**

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் அறுபத்து ஆறாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 சுறவம் நல்லோரை தைத் திங்கள் 18ம் நாள் நிறைமதி அன்று (01-02-2026 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org